உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞாநசம்பந்தகுருப்யோநம:

சித்தாந்தரத்நாகரம்.

ச-வது சஞ்சிகை.

இதிலடங்கிய நூல்கள்.

ஆசார்யப்பிரபாவம்.

சிவதத்வசிந்தாமணி.

பிரமவித்யா விகற்ப நிரசநம்.

இவை

"வைதிக சைவ சித்தாந்த சண்டமாருதம்"

ஸ்ரீலஸ்ரீ

சோமசுந்தர நாயகரவர்களால்

இயற்றப்பட்டு

ஷையார் மாணவகர்

ப. அப்பாவு செட்டியாரவர்களால்

பரிசோதித்துத் தமது

சென்னை:

வித்யாபாஸ்கர அச்சியந்திரசாலையிற் பதித்து

வெளியிடப்பட்டன

Second Edition.

30 April 1906.

Copy-right Registered.

உ

சிவமயம்.

முக்கியகவனிப்பு.

சந்தாதாரர்களுடைய நல்லாதரவை யாம் யெதிர்பார்த்தே இச் சித்தாந்தரத்நாகரத்தைச் சஞ்சிகை ரூபமாக வெளியிடத் தொடங்கினோமாகையால், வெளியூர் கையொப்ப நேயர்கள் தங்கள் சந்தாத் தொகையை ஒருவருடத்திற்கு முன்பணமாக மணியார்டர் மூலமாய்ச் செலவுடன் ரூபா 2-14-0 எமக்கனுப்பி யுபகரிப்பதுடன் தம்மைப்போன்ற வகையில் கையொப்பக்காரர்களையுஞ் சேர்த்து மேன்மேலும் அபிவிருத்தியடைய முயற்சி செய்யும்படி வந்தனபூர்வமாய்க் கேட்டுக்கொள்ளுகின்றனம். உள்ளூர் கையொப்ப நண்பர்கள் இவ்வரியதோர் சஞ்சிகையைப் பெற்றுக்கொண்டவுடன் தங்கள் தங்கள் பாக்கிகளைத் தயைசெய்து செலுத்திவிட்டால் மகோபகாரமாயிருக்கும். இந்நூல் யாதோரிடையூறின்றி இனிது முடியும்பொருட்டே மாதாந்தம் செலவாகுந் தொகைக்குப் போதுமான வரவை விரும்பியே இக்கவனிப்பை வெளியிடத் துணிந்தனம். இவ்விஷயத்தில் அன்பர்கள் யாவரும் மிகவும் அன்புகூர்ந்து சிந்தை வைப்பார்களென்று நம்புகின்றனம். சுபம்! சுபம்!

ப. அ.

இறேனென்றனள். மற்றொருத்தி விதந்துவாயிருந்தவள் முன்னவ
ளைப் பரிகசிப்பதுபோல் எனக்குமொரு புத்திரனுண்டானால் அவ
னிவிரட்டிப்பாய் உன்னையாராதிக்கிறே னென்று பிரார்த்தித்துக்
கொண்டனள். இரண்டுபேருக்கும் விநாயகருடைய பிரசாதத்தால்
பிள்ளைகளுண்டாயின. அந்தப் பிள்ளைகளில் விதந்துவுக்குப் பிறந்த
பிள்ளையே சங்கராசாரியர் என்று கூறுவதொன்றாம். மற்றொன்றோ
வெனின், சிவகுரு என்னுந் தந்தைக்கும், ஆரியாம்பாள் என்னுந்
தாய்க்குங் கேரளதேசத்தில் சங்கராசாரியர் சிவாம்சத்தால் பிள்ளை
யாகப் பிறந்தாரென் றுரைப்பதேயாம். எந்த ரூபத்தில் பார்த்தாலு
ம் மாதாவினது கர்ப்பவாசையோகாதி தோஷங்களுக்கு நிவிர்த்தியு
ண்டானதில்லை. இன்ன சாமானிய ஜந்துவைச் சிவாவதாரமென்ப
து எங்ஙனமடுக்கும்? "எல்லார் பிறப்பு மிறப்புமியற் பாவலர்தஞ், சொல்
லாற்றெளிந்தேம் நம்சோணேச—ரில்லிற், பிறந்தகதை யுங்கேளேம் பேரு
லகில் வாழ்ந்துண், டிறந்தகதை யுங்கேட் டிலேம்" என்னு மான்றோருரை
யை யுணர்ந்தபோ சிவன் சங்கராசாரியராகப் பிறந்திருந்தொழிந்தா
ரென்றுரைத்தல் யாண்டிசையும்? இன்னும், மேல் சிவரஹஸ்ய வச
னத்தில் அவனுக்கு வேதாந்தவித்தைதக னெம்மா லுபதேசிக்கப்ப
டும் என்று சிவபெருமான் கூறினதும் சங்கராசாரியர் சிவனல்லவெ
ன்பதைக் காட்டும். சிவனே சங்கராசாரியராகப் பிறந்ததுண்டாயின்,
சிவன் சர்வஞ்ஞனானபடிச் சங்கராசாரியரும் சர்வஞ்ஞராதல் சாலு
ம். ஆகவே, சங்கராசாரியர்க்குச் சிவனுபதேசித்தல் சாலாது. ஒரு
தீபத்தின் மற்றொரு தீபமுண்டாகுமே லிரண்டு மிருட்பகையு மொ
ளிப் பிழம்புமாத லுண்மை யாகையால். ஆகவே, ஒன்று மற்றொன்
றுக்கு ஒளியைக் காட்டுவ தவசியமன்றாம். சிவன் உமாதேவியார்க்
கும் இளைய பிள்ளையார்க்கு முபதேசித்தல்போலாமெனின், அவை
லீலாமாத்திர மெனவறிக. அப்படியே பிறவியுங் கொள்வாமெனி
ன், உமாதேவியாரும், இளையபிள்ளையாரும் சங்கராசாரியரைப் போ
ல் யோனித்தழும்புண்டு பிறந்தவரனாகலானும், சங்கராசாரிய
ரைப்போல் விஷ்ணு முதலியோரைத் துதித்து வணங்காதவராகலா
னும் உமாதேவியார் முதலினர்போல் சங்கராசாரியர் செயல்களையு
ங்கொள்வது அசங்கத மெனவறிக. விஷ்ணுமுதலினோர் பிறந்திறந்
துழலும் பசுக்களாதல் திண்ணமாக, அன்னோரை யுமாதேவியார் மு
தலினோ ரெங்ஙனம் வணங்குவர்? சங்கராசாரியர் பரகாயப் பிரவே
சஞ் செய்திருந்த வோர்காலத்தில் அவருடைய ஸ்வசரீரம் தகிக்கப்

படுங்கால் மீண்டு மதனுட்புகுந்து அந்தக்காலத்தில் தம்மை ரக்ஷிக்கு
ம்பொருட்டு நரசிங்க மூர்த்தியைத் துதித்து அவரால் பாதுகாக்கப்
பெற்ற புதுமை முதலிய பல வாபாசங்க ளுடையா ரென்பதுண்
மையாயி னெந்த மதியா லின்ன தோஷங்களை லீலையென யாம்
கொள்ளுதலமையும்? இது மாத்திரமேன்றி விஷ்ணுபுஜங்க முதலி
ய பசுபாரம்ய துதிகளுங்கூறினா ராகலி னித்துணைச் செயல்களை
லீலையெனக் கூறுதலடாது! அடாது!! இந்தவுண்மையால், அவர்
பாசபந்தியாகிய வோர்பசு வென்பதேயமையும். பசுவான காலத்து
ம் பாகப்பட்ட பசுவாகாது சாமானிய பசுவேயாகு முண்மையால்
தன்னை யொத்த பசுக்களை யெல்லாமும் வணங்கி மகிழ்ந்தனர். "மா
லயனு மிந்திரனும் வாழுவதாய் மாளுவதாஞ், சாலமயல் பார்த்துத் தலையசை
ப்பர்" என்னுந் திருவாக்கால் சிவஞானிகள் விஷ்ணுமுதலினோர் பத
விகளை மதியார் என்று பெறப்பட்டமையாலுங்காண்க. விஷ்ணுமு
தலினோர்பா லுபதேசத்தைப் பெற்றுச் சகல கேவலத் தாக்குண்டு
லுமோர் பசுவாகிய சங்கராசாரியர்க்குச் சிவபெருமான் பிரம்ஹ
வித்தைகளை யுபதேசிக்கின்றார் என்பதை லீலையென்றல் யாண்டி
யும்? அவர்பசுவாதல் பற்றியே அவரறியாமைதொலையச் சிவபெ
ருமான் வேதாந்தவித்தைகளை யுபதேசித்தல் கூடும்! கூடும்!!

இதுநிற்க, மேல்வாக்கியத்தாற் பெறப்பட்ட சங்கரர் வேறு எ
னவும், மாயாவாத பாஷ்யகர்த்தாவாகிய சங்கராசாரியர் வேறு என
வும் வியவஸ்தை முகத்தாற் கூறுகிற்பாம். அந்த வசனத்தில் என்
னுடைய வநுக்கிரகத்தா லொருவன் பிறக்கப்போகிறா னெனவும்
அவன் சாங்கரர்களுக்குள்ளே யுத்தமனெனவும், அவனுக்கு வே
தாந்த வித்தைகளை யாமுபதேசிப்போமெனவும், அவன் பாஷண்ட
ர்களை யெல்லாங் கடிந்துண்மையை நாட்டுவனெனவும் லோகமாதா
வாகிய வுமாதேவியாரைப் பார்த்துச் சிவபெருமான் சொல்லியரு
ளினராக வெளிப்பட்டது. இதனைப் பரியாலோசிக்கில், சிவாநுக்ரக
த்தாற் பிறந்தவொருவர் சிவனுக்கு அபராதங்களைச் செய்யாரன்
றோ? (சாங்கரோத்தம:) சாம்பவச்சிரேஷ்டரா யிருப்பாரொருவர் சி
வனுக்கு அபராதங்களைச் செய்யாரன்றோ? சிவபெருமானால் வேதா
ந்தோபதேசஞ் செய்து கொண்டவொருவர் சிவனுக்கு அபராதங்க
ளைச் செய்யாரன்றோ? பாஷண்டமதங்களைக் கண்டிக்கவந்த வொ
ருவர் சிவசம்பந்தமாகிய மார்க்கத்தைக் கடிந்து சிவனுக்கு அபரா[த]
ங்களைச் செய்யாரன்றோ? இங்ஙனமாக, சங்கராசாரியர் ஏகான்ம

வாதத்தைச் சாதித்து (அஹம்பிரம்ஹாஸ்மி) என்னுஞ் சித்தாந்தத்தைநாட்டிச் சீவன், ஈசன், ஜகத்து இம்மூன்றும் மித்தையெனவும், நான்மாத்திரமே சத்தியமெனவுங் கூறித்திரிந்து, அறியாமைதுக்கங்களோடுங் கூடியதன்னைச் சந்துச்சித்தாநந்த வடிவமாகிய சிவனாகப் புலம்பி யிழைத்த வபராதத்துக்குள்ளாவரெனின், எப்படியோ வச்சிவாபராத சிசுவைச் சிவாநுக்ரகத்தால் வந்தவராகக் கூறுதலமையும்? "நாஹம்தேஹோ நேந்த்ரியாண் யந்தரங்கே, நாஹம்காரः ப்ராணவர்க்கோ நபுத்திः, தாராபத்ய க்ஷேத்ரவித்தாதிதூரः, ஸாக்ஷீநித்யஃப்ரத்யகாத்மாச் சிவோஹம்" என்று புலம்பி அஹம்சிவம் என்று அறியாமைமேற்கொண்டு பிதற்றிச் சிவாபராதமிழைத்தசேயை யெப்படியோ சாம்பவச் சிரேஷ்டரென்று கூறுதலமையும்? "ஆணவத்தோ டத்துவிதமானபடி மெய்ஞ்ஞானத், தாணுவினோ டத்துவிதஞ் சாருநாளெந்நாளோ" என்று மகிழும் பெரியோர் சிவனடியவரா? யானேசிவம் என்று மகிழுஞ்சிறுர் சிவனடியவரா? சிவனடியா ரிலக்கணந்தா னென்னை? திருநாவுக்கரசு சுவாமிகள் முதலிய சிவஞானச் செல்வர் மாங்மியவாயிலாய்க் கண்டுணர்க. சிவனில்லை, நானே சிவம் என்றுகூறி யுலகத்தை வஞ்சித்தொழுகிய வவ்வந்தகக்குழவிக்கு எப்படியோ சிவபெருமான் வேதாந்த வித்தைகளுபதேசித்தா ரென்றலமையும்? "நசைவம் நசாக்தோ நவிஷ்ணுர்க் கணேசோ, நசௌரஞ்ச காபாலிகந்தர்சநம் வா, மதம்சர்வமேகம் ஜிதம்கர்மக்ருத்யம், சிதாநந்தரூப்ச் சிவோஹம் சிவோஹம்" எனக்கூறிச் சைவத்தை மற்றைப் பாஷண்ட மார்க்கங்களோடுதூஷித்த பரமபாஷண்டியை யெப்படியோ பாஷண்ட மதங்களைக்கண்டிக்கப் போகிறான் என்று சிவபெருமான் கூறுதலமையும்? சங்கராசாரியர் பாஷண்ட மதங்களைக் கண்டித்தவர் என்னுங்கால் சைவமும் அவரால் நிந்திக்கப்பட்டமையால், அச்சைவமும் பாஷண்டமதங்களோ டொருசேரக்கழியும். நல்லழகிது. சைவத்தைப் பாஷண்டமாக்கத்தானே சிவன் அமிசாவதாரங்கொண்டு சங்கராசாரியாகவுலகிற்பிறந்தது? ஆச்சரியம்! ஆச்சரியம்!! சிவசம்பந்தத்தைப் பாஷண்டமென்று கடியவந்த சங்கராசாரியைக் காட்டிலும் பாஷண்டச்சிரேஷ்டாள் இடையாமையி னச்சங்கராசாரியே முதலான பாஷண்டர் மதங்களைக் கடிந்து சிவனுண்மையை நாட்டிச் சித்தாந்தஞானத்தை யளிக்கவல்ல சைவாசாரிய ரொருவரையே யாண்டுச் "சாங்கரோத்தமः" எனவியந்து சங்கரர் என்னும் பெயரால் சிவபெருமான் உரைத்தருளினரெனவறிக. "சிவனடியேசிந் திக்குந்திருப்பெருகு சிவஞானம், பவமதனையறமாற்றும் பாங்கினிலோங்கியஞான, முவமையிலா

க்கலைஞான முணர்வரியமெய்ஞ்ஞானம், தவமுதல்வர்சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில்” என்னுமநுபூதியுடைய பெருஞ்செல்வரன்றோ சிவானுக்ரகத்தால் பூமியில் வரத்தக்கவரும், சாம்பவச்சிரேஷ்டராவாரும், சிவபெருமானால் வேதாந்தவித்தைக ளுபதேசிக்கப்பெறும் பாக்கியத்தை யுடையாரும், பாஷண்ட மதங்களை யெல்லாங்கண்டித்துச் சிவஞானத்தை யுலகம்பெற்றுய்ய வருள்வாரும், சிவபெருமானு முமாதேவியாருக் கெடுத்திசைக்கும் பெருநலனுடையாருமாவர்?

இதுகாறும் விவகரித்த நியாயங்களால் சங்கரர் கலியில் பிறக்கப் போகிறாரென்று சிவபெருமான் கூறிய சிவரஹஸ்யவசனம் சங்கராசாரியரை யுணர்த்தாமையின், அச்சங்கரர் வேறியாவரென விசாரிக்க வருஞ்சங்கையைச் சற்றே யோசிப்பாம். மேல்வாக்கியத்தில் சங்கரர் கலியிற் பிறக்கப்போகிறா ரென்று பெறப்பட்டமையானும், அக்கலியின்னும் பூர்த்தியாகாமையானும் சங்கரர் பிறந்தாய்விட்டதென்று யோசிப்பது பிழையாம். கலிக்கு வருடம் நாலுலட்சத்து முப்பத்திராயிரமென் றேற்பட்ட கணக்கில், இதுவரையில் நாலாயிரத்துச் சில்லரையே நடந்தமையால் இன்னும் நாலுலட்சத்து இருபத்தெண்ணாயிரம் வருடங்கள் நடக்கவேண்டி யிருக்கின்றன. இந்தக் கணக்கின்படிக் கலியில் நூற்றெட்டி லொருபாகம் நடந்து இன்னும் நூற்றேழுபாகம் நடக்க வேண்டியிருப்பதாக வேர்ப்பட்டது. இவ்வளவு பெருங்காலத்தை யபேக்ஷித்துடைய நாம், சங்கரர் அவதரிப்பதற்குக் காலம் போய்விட்டதே யென்று அஞ்சுவதென்னை? கலிமுதிர முதிரவே பாஷண்ட விர்த்திக்கிடமாகையால் சங்கரர் கலியந்தத்திற் பிறப்பாரென்பதே மேலோர் துணிபாம். ஆகவே, அவரின்னு மவதரிக்கவில்லை யென்பதே நிச்சயமெனவறிக. சங்கராசாரி யென்பவர் பிறந்து அநேகமாயுள்ள பாஷண்ட மதங்களை யெல்லாங் கண்டித்து, அத்வைத ஸ்தாபனஞ் செய்தாரென்று சிலர்கூறுவதால், அவரே பாஷண்டமத வித்வம்சகரென்ற லமையாதோ வெனின், அதுபோலியத்துவிதமேயன்றி யதார்த்தாத்வைதமன்றாம். அவர் மாத்திரமேயன்றிப் பௌத்தசார்வாக பாஞ்சராத்திர மதங்களுள்ளு மொவ்வொரு குருட்டுக் குருக்கள் பிறந்து பாஷண்டமதங்களை யெல்லாங்கடிந்து, அவரவர் மதங்களைத் தாபித்தன ரென்று அவ்வவ்வபிமானிகள் சொல்லித்திரியும் வழக்கால், சங்கராசாரியர் விஷயமாத்திரமே சால்புடைத்தாதலெங்ஙனம்? சங்கராசாரி

யால் தாபிக்கப்பட்டமதம் போலியத்துவிதமாகிய ஏகான்மவாதமே யாகையாலும், அதுவே, மாயாவாதம், அஹம்பிரம்ஹவாதம், பிரச்சின்ன பௌத்தவாதம என்றுசொல்லப்பட்டுச் சங்கரசங்கிதை முதலிய நூல்களில் நிந்திக்கப் படுகையாலும், அன்ன ஹேயலட்சண மதமாகிய துர்மத சித்தாந்தியைச் சிவரஹஸ்யாதிகள் பூஜ்யமாய்ச் சொல்லு மென்பது நிரஸ்தம். அச்சிவரஹஸ்யம், ஹரதத்தாசாரிய சுவாமிகள், பட்டினத்தடிகள் முதலிய சிவாநுபூதிமான்களையும், அறுபத்து மூன்று நாயன்மார்களையும், இன்னுஞ் சிவோத்கர்ஷ மஹிமாவர்நனங்களையுமே சொல்ல வந்ததாக, அத்துடன் சிவின் சங்கராசாரியாகப் பிறந்தார், செத்தாரென்று சிவாபகர்ஷங்களையும், சைவநிந்தகராகிய சங்கராசாரியையுங் கூறுமென்பது சர்வாபத்தமெனவறிக. ஹரதத்தாசாரிய சுவாமிகள் முதலிய சிமான்கள் ஜகதுத்தாரணார்த்தம் அவதரிக்கப் போகின்றார்க ளென்று சொல்லிய சிவரஹஸ்யம், தத்விரோத சித்தாந்தியாகிய சங்கராசாரியையு மவருடன் சேர்த்துக் கூறுமென்பது என்னவிந்தை? காடாந்ததமமாகிய அஞ்ஞானத்தை யழிக்கும் ஞானமெய்தாதவர்க்குப் பிறவி யொழியாதென்று கூறும் வேதமானது அதைப்பிரகடநமாய்க் காடாந்ததமமாகிய ஞானத்தை யழிக்கு மஞ்ஞான மெய்தாதவர்க்குப் பிறவி யொழியாதென்று கூறுமென்பது விந்தையாமன்றோ? அங்ஙனமாக, சங்கராசாரியர்கோளை மாற்றவெழுந்த ஹரதத்தாசாரிய சுவாமிகளையும், ஹரதத்தாசாரிய சுவாமிகள் சித்தாந்தத்தை நிந்திக்கவெழுந்த சங்கராசாரியையும் ஒரு நூலிலே தானே பூஜ்யமாய்ச் சொல்லுமென்பது பொருந்தாதெனவறிக. அன்றியும், சிவரஹஸ்யத்தில், இனி ஜகதுத்தாரணார்த்தம் பிறக்கப்போகின்றார்க ளென்று கூறியுள்ள வாசாரியர்களெல்லாம் பிறந்தாய் விட்டது என்று யாம்கொள்வாமெனின், இனிப்பிறக்கப்போகின்றவ ரொருவருமில்லையென்று முடியுமன்றோ? அப்படியாயின், இன்னும், நாலுலட்சத்திருபத் தெண்ணாயிரம் வருடங்கள் கழியவேண்டிய விக்கலி தோஷம் எப்படி நிவிர்த்திபெறும்? இக்கலியினற்பகாலமே யிப்போதாயிருக்க, இவ்வளவிலேதானே யெவ்வளவு விபரீதங்கள் விளைந்திருக்கின்றன? மற்றையதிகபாகங் கழிவதற்குள் ளெவ்வளவு அநர்த்த முண்டாகும்? அப்போதுவந்து அந்த விருட்டைச் சேதிப்பவர்யாவர்? இனியொருவரும் வரவேண்டியதில்லை யென்று கொள்வாமெனின், கலிக்குச் சமாப்தமன்றோ சொல்லவரும்? இப்போதுள்ள நிலையென்றி பின்னுங்

கெடாதெனின், இப்போதுள்ள நிலைதானென்னை சுத்தமா? அசுத்தமணமே கமழ்தலாலின்னும் அதிகரிக்குமென்பதே திண்ணம். இனித் தோஷவிர்த்தி யுண்டாகாதபோது அதுகலியன்றாம். அப்போது கலிக்கு வரையறுத்துரைத்த காலமும் பிழையாம். இன்னபல தோஷங்களை விளைக்குங் கலிபுருஷனாகிய சங்கராசாரி கதையைச் சிவரஹஸ்யத்தில் நுழைப்பது அசங்கதம்! அசங்கதம்!!

இதுநிற்க, சங்கராசாரியைச் சிவாவதார மென்று கூறித்திரியும் விவேகிகள் தாம் பிரமாணமாகக்கொண்ட சிவரஹஸ்ய மினைத்தெனவறியாது, அது ஸ்காந்தம் சங்கர சங்கிதையிலுள்ளதாகக் கூறி மகிழ்கின்றனர். ஸ்காந்தம் ஆறுசங்கிதைகளாகப்பிரிந்து, அவற்றொன்றாகிய சங்கரசங்கிதை முப்பத்திரண்டு கண்டங்களாய் வெளிப்படும். அந்த முப்பத்திரண்டு கண்டங்களில் சிவரஹஸ்யகண்டமென்ப தொன்றாம். இதுவே குமாரசம்பவ முதலியவற்றை யுடன்கொண்டு ஸ்காந்தம் என்னும்பேரால் வழங்கப்பட்டுவருகின்றது. இதில் சங்கராசாரி மாந்மியமுதலிய தப்புக்கதைகள் மருந்துக்குங் -யாது. ஆயின், மேலிடங்களில் சிவரஹஸ்யம் என்றெடுத்து ..ங்கரித்தநூல் யாதெனின், அது இதிஹாசமெனவறிக. வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் என்பனவற்றுள் வேதம்நான்கும், ஆகமம் இருபத்தெட்டும், புராணம்பதினெட்டும் என்றபடி இதிகாசம் நூற்றிருபத்தாறு என வெளிப்படும். அவற்றுள் சிவரஹஸ்யமொன்றே பிரத்தியட்சமும், ஏனையன வப்பிரத்தியட்சமு மாயின. பிரத்தியட்ச கதமாகிய சிவரஹஸ்யந்தானே அம்சங்களைக்கொண்டு விளங்கும். சிவரஹஸ்யம் ஒன்பதாவது அம்சம் பதினாறுவது அத்தியாயத்தில் சங்கரர் அவதாரங் கூறப்பட்டதென்பது இதிகாசமாகிய சிவரஹஸ்யத்தாலன்றிப் புராணாந்தர்க் கதமாகிய சிவரஹஸ்ய கண்டத்தாலன்றாம். இவ்வுண்மையை ஸ்காந்த மஹாபுராணத்தானும், சிவரஹஸ்யமென்னு மிதிகாசத்தானுங் கண்டறிந்தடங்குக. சிவரஹஸ்ய மினைத்தெனவறியாது குழறிவழியு மாபாசங்களைப் (* பேதவாத திமிரபாஸ்கரம்) என்னுமபேரா லொருகபோதிமகன்

---

* இக்கபோதித்திரட்டில் கேரளதேசத்தில் சகலவென்னுங்கிராமத்தில் சிவன் அம்சத்தால் சங்காராசாரியாகப் பிறந்திருந் தொழியப்போகிறாரென்று ஸ்காந்தமஹாபுராணத்திற் சொல்லப்பட்டதாகச் சிவசுலோகங்கள் கற்பித்தெழுதப்பட்டிருக்கின்றன. ஸ்காந்தம் ஜகத்பிரசித்தியான பிரத்தியட்சப் பிரமாணமாக வேனு ஆன்றிவிசாரியாம லதிலுள்ளது மில்லாததுங் கண்டிகழ்ந்து காறியுமிழ்வார்களேயென்று யோசியாமல் வரைந்துவிடுத்தனர். ஆச்சரியம்! ஆச்சரியம்!!

வெளியிட்ட கசுமாலத் திரட்டொன்றினும், (சங்கரவிஜயம்) என்னும்பேரால் மொழிபெயர்த்து வெளியிடப்பட்ட சங்கராசாரி கதையாகிய தமிழ்ச்சுவடி யொன்றினுங் கண்டுதெளியலாம். மேலுண்மை நியாயங்களால், சிவரஹஸ்யத்திற் சிவன் சங்கராசாரியாகப் பிறக்கப்போகிறாரென்று கூறப்பட்டுள்ளதென்பது அபத்தமெனவும், ஏகாத்மவாத பாஷ்யகர்த்தாவாகிய வச்சங்கராசாரியரே சிவரஹஸ்யத்திற் கூறப்பட்டவரென்பது ஹேயகிராஹ்யமெனவும், அதனாற் பெறப்பட்ட சங்கரர் இன்னுமவதரிக்க வில்லையெனவும், இனிக் கலியந்தத்திலே தானே யவ்வவதாரஞ் செய்வரெனவும், அச்சிவரஹஸ்யமென்பது இதிகாசத்தி லொன்றெனவும், அதற்குவேறாகச் சிவரஹஸ்ய கண்டமென்பதொன்று ஸ்காந்தம் சங்கரசங்கிதையிற் பெறப்பட்டுள்ளதெனவும், அதில் சங்கராசாரிகதை முதலிய வாபாசங்கள் கிடையாவெனவும் நிச்சயிக்கப்பட்டது. மேல்விசாரத்தால் நின்மலராகிய சிவபெருமான் யோனிஜராய்ப் பிறந்துழலாரென்னு முண்மை வெளிப்பட்டமையால், இளைய பிள்ளையாருடைய வவதாரமாகிய ஞானசம்பந்தமூர்த்திகளுக்கு யோனிஜத்வங்கூறி ழிவார்கோள் குண[illegible]ாய் முடிந்தது. இன்னும் விரிக்கிற் பெருகும்.

இனிப்பிள்ளையார்க்கு உமாதேவியார் திருமுலைப்பாலை யூட்டியபோது முலைகொடுத் தூண்ணச்செய்யாது பொற்கிண்ணத்திற் கறந்தூட்டியதென்னையெனின், "அழுகின்றபிள்ளையார் தமைநோக்கி யருட்கருணை, யெழுகின்ற திருவுள்ளத்திறையவர்தா மெவ்வுலகுந், தொழுகின்றமலைக்கொடியைப் பார்த்தருளித் துணைமுலைகள், பொழிகின்றபாலடிசில் பொன்வள்ளத் தூட்டென்ன" என்னுந் திருவாக்குண்மையால் நம்பெருவாழ்வாகிய ஞானசம்பந்தர் மூன்றுவயசுடைய குழந்தையாய்க் குளப்படிக்கரையி லிருந்தழுதபோது பெருமானோடுவந்துகண்ட பிராட்டியாருள்ளங் குழைந்து தமதருமைத் திருக்கரங்களாலெடுத்து மார்பகத்தணைத்துக் கொண்டனர். அப்போது அவர் துணைமுலைகளினின்றும் பாலமுதம் பீரிட்டு வழிந்தொழுகலால், அது அவலமாகாதபடிப் பொற்கிண்ணத்திற் கறந்தூட்டினரெனவறிக. "துணைமுலைகள் பொழிகின்ற பாலடிசி" லென்றமையானே மேலுண்மை விளங்குமென்க. பிராட்டியார் நீண்டநாள் பிரிந்தவாராமை மேலிடக்கண்ட விளங்காளையாகிய நங்குருராயனிடஞ் சேர்த்த வன்பின்மிகுதிப்பாட்டேயவர் திருமுலைகளில் பால்சுரந்தமையறிக. "இல்லாமுலைப்பாலுங் கண்ணீருமேந்திழைபா, னல்லாயுளவாமா னீர்நிழல்போ-லல்லா, வருவாகி

நின்றானை யாரறிவார் தானே, யுருவாகித் தோன்றானேலூற்று" என்னுந் திருவெண்பாவை யுய்த்துணருங்கால் இன்னதன்மையனென் றறிவரியானாகிய சிவன் உயிர்கண்மாட்டிரங்கிக் கொண்டகோலங்களை யுவமையால் விளக்கவேண்டிக் காட்டினமையே வெளிப்பட்டவாறறிக. "எத்திய விழைகளை யுடையாட்குக் குழவிமாட்டினதாகி வருவதாகிய வன்பினைப் பிறரறியுமாறு வெளிப்படுத்து மவ்வன்பி னுருவாகிய முலைப்பாலுங் கண்ணீருமவண்மாட்டுக் குழவியைக்காணுமுன் னில்லவாய்ப் பின்னுளவாம்" எனநிகழும் பொருண்மையால் முலைப்பாலுங் கண்ணீரும் அன்பை விளக்குமடையாளங்களாயின. அன்பினுருவாய்த் தோன்றும் பாலவ்வன்பின் மிகுதிப்பாட்டாற்பொங்கி மேல்வழிதலி னம்மையார்க்கு ஞானசம்பந்தரிட மதிகரித்த வன்பின்றன்மை நிகழ்ந்தமைவெளிப்பட்டது. இவ்வுண்மை "சுரந்ததிருமுலைக்கேதிய திருஞானஞ், சுரந்துண்டார் பிள்ளையெனச்சொல்லச்-சுரந்த, தனமுடையாள் தென்பாண்டிமாதேவிதாழ்ந்த, மனமுடையாளன்பிருந்தவாறு" எனவும், "இலைபடர்ந்த பொய்கை யிடத்தழுதல்கண்டு, முலைசுரந்தவன்னையோ முன்னின் -னிலைவிளம்பக், கொங்கைசுரந்தவருட் கோமகளோசம்பந்தா, விங்குயர்ந்தாரார்சொல் லெனக்கு" எனவும் வருந்திருவாக்குகளாலும் வெளிப்படுமென்க. மங்கலநாண் பொலிவெய்தி நிலைபெறச் சமண்குன் [illegible] திலைப் "பையவேசென்று பாண்டியற்காகவே" என நங்குருநாதனா லருள்பெற்ற நிரதிசயப் பெருஞ்செல்வமுடையாராகு மங்கையர்க்கரசியார்க்கும் பிராட்டியார்க் குற்றபடி யெய்தினமையே மேல்விளக்கியவாறறிக. சம்பந்தப்பிள்ளையார் திருவாலவாய்த் திருக்கோயிற் கோபுரவாயிலிலணையுங்காலெதிர்ப்பட்ட பாண்டிமாதேவியா ரோர்புறமொதுங்கி யஞ்சலிகூப்பிநின்றனர். அப்போது குலச்சிறையாராகு மந்திரியாரவரைச் சுட்டியிவரே பாண்டிமாதேவியா ரென்றவளவில் சுவாமிவிரைந்து தமதுமெல்லிய சிறியபூம்பதங்கள் பூமியிற் பொருந்தநடந்து நெற்றியிற் சுட்டியணிந்து கண்களின் மைதீட்டிவிளங்கிய தம்பிளங்குழவிப்பருவத் திருக்கோலமவர் கண்டு மகிழ்வெய்த வருகேசேறலுங் கண்களி னீர்ததும்பத் திருமுலைகளிற் பால்சுரந்திட வவரை வணங்கி யெம்பெருஞ்செல்வமே யெனவாழ்த்தி யிருகரங்களாரவெடுத்தணைத்து உச்சிமோந்து முத்தமிட்டு மகிழ்வெய்தினர். இவ்வுண்மையநுபூதியை "அன்பிற்குமுண்டோ வடைக்குந்தாழார்வலர், புன்கணீர் பூசறரும்" என்பதனானுமறிக. இதனால், உமாதேவியார் ஞானசம்பந்தருக்கு முலைகொடுத் தன்னைச்செய்யாது பொற்கிண்ணத்திற் கறந்தூட்டின காரணமினிது வெளிப்பட்டது.

இதுகாறும் விவகரித்த வுண்மையால் அன்பின்மேலீட்டாற்
சுரந்தொழுகிய பாலுக்கு வீண்போக் குண்டாகாதபடிப் பொற்கி
ண்ணத்திற் கறந்தூட்டினமையேயன்றி யத்திருமுலைப்பாலமுதத்தி
னருமைப்பாடும் வெளிப்பட்டமை காண்க. "சமந்தேவி ஸ்கந்தத்வி
பவதந பீதம் ஸ்தநயுகம் தவேதம்நஃ கேதம் ஹரதுதத ஸம்ப்ரஸ்நுதமு
கம், யதாலோக்யாசம் காகுலித ஹ்ருதயோஹாஸ ஜநகஃ ஸ்வகும்பௌ
ஹேரம்பஃ ப்ரவிம்ருசதி ஹஸ்தேநஜடிதி" என்று சங்கராசாரியர் கூறி
யவாக்கியத்தின் பொருளை நோக்குங்கால் "நித்தரொருபக்கமயினிற்களி
றன் வட்டமுலைநிற்குமெழிலிற்றனதுசீர், மத்தகமெனத்தனிலயிர்த்தொருக
ரத்தைமுடி வைத்துறவறத்தடவுமான், முத்தமுலைசெப்புவதெனக்களிறுபிற்
குமரன்முற்புதல்வர் துய்த்தவமுதா, லத்தலைமைபெற்றனரதிற்றிவலையிட்டினு
மெனற்பவுயிர்முத்திபெறுமே" என்று பெறப்பட்டது. இதில்விநாயக
க்கடவுளும், முருகக்கடவுளுமாகிய நின்மக்களிருவரும் நினதுதிரு
முலை யமுதுண்டமையா லன்றோரக் கடவுட்டலைமை பெற்றனரெ
னவும், பாலமுதமத்தனையுமன்றி யதிலோர்திவலையெனக்குக் கிடை
ப்பினு மதுவேபோதுமாகியெனதற்பத்தன்மையுடைய வுயிர் முத்தி
யைப் பெறுமெனவும் விதந்தமைவெளிப்பட்டது. இதை யுய்த்து
ணருங்கால் அவ்விருவரு நின்புதல்வராகையால் அவர்க்குன் றிருமு
லையமுதம் பகிர்ந்தனையெனவும், அவர்க்கவ்வளவு சாதாரணமாக வ
து கொடுத்தது அவர் நின்னில்வேறாகாத விபூதிகளாகு முண்மை
யாலெனவும், அவரைப்போலன்றி விஜாதிப்பொருளாகி மலத்திரய
த்தாக்குண்டுழலும் யான் பசுவாதலால் அப்பாலமுதம் யான் பெற
க்கிடைப்பினு மதுபாசமாகிய குற்றத்தையே போக்குமன்றி நின்ம
க்களிருவரும்பெற்ற கடவுட்டலைமையைப் பயவாதெனவும், தாயி
னுடைய முலைப்பாலமுதம் பிள்ளைகளுக்கன்றி யேனையோர்க்கு வழ
ங்க வுரிமையல்லாமையால் அன்னியனாகிய யா னவாமிகுதியால் விரு
ம்பினு மதுகிடைப்பது அருமையேயெனவும், அவர் பிள்ளைகளாத
லாலவர்க்கு நீயேவலிந்து நின்றிருமுலையமுத மருத்தினையெனவும்
அவரை யொத்தவுரிமை யெய்தாதவனாய்ப் பாசஜாலத்திற்கட்டுண்
டுழலும் பாமரனாகியயான் வலிந்து வாய்திறந்துகேட்டு மிதுகாறும்
வழங்காமையே யினிவழங்காயென்பதைக் காட்டுமெனவும், நீவழங்
காயென்றறிந்த பின்னரு நின்பாலிரப்ப தென்னாசையிருந்தபடியெ
னவும் வெளியாகின்றது. இத்துணை யருமைப்பாட்டினதாகு மம்மு
லையமுதம் பிராட்டியார் திருமுலைகளிற் சுரந்தபோ ததிலோரற்பமு
மவலப்படாதவழிப் பொற்கிண்ணத்திற் கறந்தூட்டினமை யங்கீகரி

க்கப்பட்டது. மூத்தபிள்ளையாரிளையப்பிள்ளையா ரிருவருக்குமேயன்றி யேனையோர்க்குப் பயன்படுத்தற் பாலதல்லாத முலைப்பாலைக் காழிப்பிள்ளையார்க்குக் கனிந்தூட்டியகருத்து மேலிடங்காட்டிய காரணக்கருத்து முகத்தானே வெளிப்படுமென்க. "அமூதேவகேஷாஜாவம் ருதரஸமாணிக்ய குதுபௌனஸந்தேஹ ஸ்பந்தோநக பதிபதாகே மநஸிந:, பிபம்தௌ தௌயஸ்மா தவிதிதவநு ஸங்கரஸிகௌ குமாராவத்யாபித் விரதவதனக் ரௌஞ்சதளநௌ" என்னும் வாக்கியத்தை நோக்குங்கால் "முக்கணிறைவர்க்குமயன் முற்றவெழின் முற்றுமுலை முட்டியசுரப்பொழுகுபான், மக்களிருவர்க்கருள வக்களிறுமிக்குகனு மட்டிளமைமுற்றுவிலா, லக்கடலுமித்தவறு தத்திவையெடுத்தி லடைந்திருகண் முத்திரையின்வாழ், செக்கர்மணிமெய்க்கலச மத்தனையுன் வட்டமுலை செப்பலமலைப் புதல்வியே" என்று வெளிப்படுகின்றது. இத்தவாக்கிய வுண்மையால் பிராட்டியாருடைய முலையமுதநுகர்ச்சியால் அவர் புதல்வர்க்கிளமை மாறுதுநின்றமை நைஜமெனவெளிப்பட்டது. இவ்வுண்மையன்றே யப்புதல்வர்க்கும் பிதாமாதாக்களைப்போலவே வயோதிகமுதலிய தேகவிகாரங்களும், ஜநநமரணவத்தைகளு முண்டாகாமற்போயின? எங்காவது வேதமுதலியகலைகளில் ஸ்கந்தகணேசர்களுக்குற்பத்திலயங்கள் கூறப்பட்டிருக்கின்றனவா? என்கூறும்? அவர்கின்மலசொரூபிக ளாகையால். இப்படியேயன்றோ நம்பெருவாழ்வாய காழிவிரகனிடமும் கருதற்பாலது? "தலஸ்தந்யம் மந்யேதரணிதரகந்யே ஹ்ருதயத: பய: பாராவாரம் பரிவஹதி ஸாரஸ்வதமிதி, தயாவத்யாதத்தம் த்ரவிடசிசு ராஸ்வாத்ய தவயத்கவீநாம் ப்ரௌடாநாம ஜநிகமநீய: கவயிதா" என்னும் வாக்கியத்தால் "தருணமங்கலையுனது சிந்தைதலைழந்த பால்முதூறினு, லருணகொங்கையி லதுபெருங்கவி யலைஎெங்கடலாகுமே, வருணநன்குறு கவுணியன்சிறுமதலையும் புயல்பருகியே, பொருணயம்பெறு கவிதையென்னொரு புனிதமாரிபொழிந்ததே" என்று பெறப்பட்டமையை நோக்கின் மேல்வாக்கியங்களில் விதந்துரைத்த வுண்மையை யுறைப்பித்தமையே வெளிப்பட்டது. எங்ஙனமெனின், இதில் பிராட்டியாருடைய பாலமூதூறிய திருமுலையைப் பயோததியெனவும், ஞானசம்பந்தரை மேகமெனவும், அவர்செய்தருளிய தேவாரத்திருப்பதிகங்களை மாரியெனவு மலங்கரிக்கப்பட்டது. எனவே, லோகமாதாவினது திருமுலையாகிய பாற்கடலிற் கவுணியர்தலைவனாகிய ஞானசம்பந்தனென்னு மேகமானது படிந்துண்டு மேலெழுந்து தேவாரமாகிய ஞானமழையைப் பொழிந்தது என்பதுவெளிப்படை. மேகம் கடலிற்படிந்து ஜலாகர்ஷணஞ்செய்து பின்னர்

மழை பொழிவது பயிர்கள் தழைத்தோங்கற் பொருட்டேயாகையா லப்பயிர்த்தானத் தியானே முதலாகப் பல்சீவர்கள் பொருளாவரெனப் பொருணோர்வது தொக்கிநின்றமை காண்க. பயிர்த்தானத்திற் போந்து மழையை யெதிர்பார்த்திருக்கு முயிர்வர்க்கத்துட்டாறு மொருவரென்பதை "அதிற்றிவலைகிட்டினு மெனற்பவுயிர் முத்தி பெறுமே" என மேல் வாக்கியத்திற் கூறியிருத்தலே காட்டும்.

மேலுண்மை விளக்கத்தால் ஞானசம்பந்தர் மூப்புமரண முதலிய விகாரங்களெய்தாத மலமுத்தரென்பது சொல்லாமேயமையும். அவர் பிராட்டியாருடைய திருமுலையமுதுண்ட முருகக்கடவுளது திருவவதாரமாவதோடு, அவ்வபராவதாரத்தினும் பிராட்டியார் திருமுலைப்பாலை யுண்டருளிய பெற்றியால் விநாயகர், ஸ்கந்தர், ஞானசம்பந்த ரென்னு மூவரேயன்றிப் பிராட்டியாரிடம் பாலமுத முண்டாரொருவரு மின்றாகையா லன்னோர்க்கும் பிராட்டியார்க்குமுள்ள சம்பந்த மினைத்தென விவேகிகளறியாமற் போகா. இவ்வருமை யெல்லாங் கண்டே யன்பிறெழுகிய சங்கராசாரியர் "அதிற்றிவலைகிட்டினும்" என அம்மையாரிடமிரந்தது அவர் புதல்வனைக் குறிப்பித்த தெனினும் அமையும்! அமையும்!! விஜாதித் தன்மையானின்றிருமுலைப்பாலை [illegible]க்குப் பகிர்ந்திலையேனு நின்சிறுவராவது அவர் பெற்றுக்[illegible] வதிகபாகத்திலோரற்பமேனு மவர் குழந்தைத் தன்மையா லருமைநோக்காதெனக்குக் கொடுப்பரேல் யானுய்வனெனப் பிராட்டியாரிடம் விண்ணப்பித்தலே சாலும். ஈண்டுப் புதல்வரெனப் பொதுப்படக்கூறினுமது ஞானசம்பந்தரையே சிறப்பு வகையாற் பற்றுமென்க. விநாயகரும், ஸ்கந்தரும் ஞானம், கிரியையென்னு மிரண்டினமிசங்களைக் கொண்டுவந்தவரும், ஞானசம்பந்தர் கேவலம் ஞானம்சமாத்திரமா யவதரித்தவருமாகையா லிந்த மூன்றவசரங்களிலுங் கிரியாசம்பந்த மொழிந்த சுத்தஞான மூர்த்தியாகிய நம்ஞானசம்பந்தப் பிள்ளையே ஞானிகளால் சேவ்யமான ராதல் சாதிக்கப்பட்டது. இவ்வுண்மையானே சங்கராசாரியர் விரும்பிய முத்திக் கேதுவாகிய ஞானப்பிரதாதாவாயுள்ளவர் ஞானசம்பந்தமூர்த்திகளே யென்பதைப் பயோததி, மேகம், மழை, பயிரென்னு முவமைகளா லவர் விதந்துகாட்டிய வற்புதவாக்கியங்களே சான்றுரைக்கும். இவ்வுவ[illegible]ந்தே மேல், ௨௪-வது பக்கத்தில் (குஹாம்சோ) என்பாம் காட்டிய வாக்கியத்தினு மேலோர் நிரகிப்பரென்க. குகாவன்னும் சுப்பிரமணியக்கடவுள் ஞானக்கிரியா சொரூபராயுள

ளவராகலி னவருடைய கிரியாம்சமிற்க, ஞானாம்சமே சம்பந்தப்பி
ள்ளையாராக வவதரித்த வுண்மையே யங்ஙனம் பிரித்தோத விடஞ்
செய்ததெனவறிக. சங்கராசாரியர் கொண்டபடியே "தலைப்பான்மை
மிகப்பெரிய காழிஞானசம்பந்தர் தம்பிள்ளைத் தனத்தினாலே, முலைப்பாலைப்
இராதேதாமே யுண்டு முத்தமிழும் பாடியருளியரானார்" என்று தத்து
ய ரென்னும் பெரியவரொருவருங் கூறினமை காண்க. குழந்
தைகள் கையி லேதாவதொன்றுகொடுத்தா லதை யார்க்குங்கொடா
மல் தாமேயுண்ணும் வழக்கேபோல ஞானசம்பந்தருங் குழந்தை
யாகையா லவரெமக் கொன்றுந்தராமல் முலைப்பாலமுதைத் தாமே
யுண்டு ஞானப்பிரகாசராயின ரென்று துதித்தமையேசாலும். அ
ல்லது சிறுபிள்ளையாகையால் தாமேயன்றிப் பிறரொருவருந் தம்
மைப்போற் பிரகாசமானராதல் கூடாதாகப் பொருமை வகித்து அ
லையமுதத்தை யவரேயுண்டு விட்டனரெனக் கூறினும் பொரு
தும். தாமேயுண்டு) என்றதனால் அவரையன்றி அதுயார்க்கும் வழ
க வுரிமையல்லாத பெற்றிமைத்தாய சீர்ப்பாடு வெளிப்பட்டமை
காண்க. இன்னவருமைகளி லன்புபாராட்டலொழிந்து மலவுறைப்
பேறித் தேம்பித்திரியுஞ சோம்பர்சிலர் சங்கராசாரியர் சௌந்தரிய
லகரியில் திரவிடசிசுவென் றெடுத்துப் புகழ்ந்தது கவுணியர் தலைவ
ராகிய சம்பந்தமூர்த்திகளை யன்றெனவும் ... கியில் திராவிட
ராகையால் தன்னையே யப்படிப்புகழ்ந்து கொ... ரனவும், அந்த
விருத்தாந்த மேதெனில், தான் எல்லாமதங்களையுங் கண்டித்துக்
கொண்டு வருகையில் சத்திபாரம்யங்களைக் கூறுஞ் சாக்தேயத்தை
யுங் கண்டித்து விட்டாரெனவும், பின்னமோர்பகல் சங்கராசாரியர்
பசியாலிளைத்து மிகவருத்தத்தோடு மார்க்கத்திற் போய்க்கொண்டி
ருக்கையில் காலிடறி வீழ்ந்து மூர்ச்சித்தாரெனவும், அப்போது
கூடையின் மோர்கொண் டெதிரிலோர் பெண்வரக்கண்டு அவளை
நோக்கிக் கொஞ்சம் மோர்தரும்படிக் கேட்டனரெனவும், அதற்கவ
ளிங்கெழுந்துவா தருகிறேனென்றபோது எனக்கெழுந்துவரச் ச
க்தியில்லை யென்றனரெனவும், அப்போதவள் பரிகசித்தது சக்தி
யென்ப தொருபொருளில்லையென்ற நின்சித்தாந்த மெங்கே காட்டு
திபார்ப்போ மென்றுரைத்தவளவில் வெட்கிநின்றன ரெனவும், பி
ன்னரந்தப் பெண்வடிவமாறி யுமாதேவியாராகத் தரிசனங்கொடுத்
து அவர்க்குத் திருமுலைப்பாலைக் கொடுத் துபசரித்தனரெனவும்,
அதனா லுமைதருபாலுண்ட மைந்தராய் நின்ற தம்மையே புகழ்தல்
சாலுமெனவும் ஞானசம்பந்தரைச் சங்கராசாரியர் துதித்தாரென்

பதைப் பரிபவமாய்க் கொண்டகொடுமையால் சமாதானஞ் சொல்
லி மகிழ்வர். இந்தக் கபோதிக்கதையை யோசிக்குமிடத்து வேறே
யாடாச மவர் தேடிக்கொள்ள வேண்டியதின்றாம். எங்ஙனமெனின்,
அவர் வெளியிட்ட குருட்டுக்கதைகளில் சங்கராசாரியர் சிவனுடை
ய வவதாரமென்று கூறியதை மறந்து அந்தோ சிவன் சங்கராசாரி
யாகப் பிறந்து அவர் தேவியாருடைய ஸ்தன்யபானஞ் செய்தாரெ
ன்று புலம்பவந்த புதுமையே புதுமை. பிள்ளை முலையுண்பதே யன்
றிப் புருஷனுண்பது எங்குள்ள முறைமை? ஞானசம்பந்தர் பிள்ளை
யாகவே, அவருண்டாரென்பது சர்வசம்பிரதிபன்னமாதல்காண்க.
இதை முறைதப்பி விவகரிக்க விடமுண்டேல் தமையன் தம்பியினு
டையதேவிமுலையையும், பிதாமகனுடைய தேவிமுலையையு முண்ணு
தலுங்கூடும். இன்ன வசம்பிரதாயங்களும் அசப்பங்களு முண்டா
கும் பெற்றிமைத்தாய சங்கராசாரியர்செய்த தேவியினுடைய ஸ்த
ன்யபானம் சர்வாபத்த மெனவறிக. அன்றியும், சங்கராசாரியர் மு
லைப்பாலுண்டதாகக் கூறவந்தகாலம் அவருடைய குழந்தைப் பருவ
த்துமன்றி முதிர்ந்த பருவத்திலென்றும் பெறப்படுகையாலது கே
வலம் மூடர்கூற்றெனவே முடிந்தது.

இன்னும் பரியாலோசிக்கில் சங்கராசாரியர் சாக்தேயத்தைக் க
ண்டித்தாரென்பதும் பொய்யாம். தேவியாரால் பரிபவத்தை யெய்
தினரென்னு முண்மையால். ஆகவே, காளன், கடம்பன், முத்தன்
என்னு நடுவீதிராயர்களிடமே யவர்தனது செங்கோல் செலுத்தின
ராக வெளிப்பட்டது. இன்னும், தேவியின் முலைப்பாலையுண்ட பின்
னரன்றியதற்குமுன்னரே மதங்களைக் கண்டித்து வந்தாரென்பதனு
லவற்றைத் தனதஞ்ஞானதசையி னடத்தினராகக் கொள்ளவரும்.
அதனு லவர் பாலுண்பதன்முன் செய்தயாவும் பயனற்றன வென்
றே நிச்சயிக்கப்பட்டன. பாலுண்டவனந்தர மெனக்கொள்வாமெ
னின், அங்ஙனமாயினேர் தோஷமு மவர்பா லெய்தாமைவேண்டும்?
பாஷ்யகிருத முதலான யாவத்காரியமுஞ் செய்து முடித்த பின்ன
ரோர்கால் கோவிந்த பகவத்பாதரென்னுந் தனது ஆசாரியரைக் கா
ணும்படியான வுத்தேசத்தா லவரைத்தேடிச் சென்றவளவி லவ்வா
சாரியர் சங்கராசாரியர் தம்மை நோக்கி வருகின்றாரென்று முன்ன
தாக வறிந்து வருகின்ற சீடர்தம்மைக் காணுதவழித் தமக்குமவர்க்
கு மிடையே திரையொன்று போடுவித்தனர். உடனே சங்கராசாரி
யர் வந்து திரைக்கு வெளியிலேதானே யிருந்துகொண்டு நப்பர

வை யறிவித்தனர். அப்போதுள்ளிருந்தகோவிந்தயோகிகள் தரிசன
ந்தரமாட்டோ மென்றனர். அதைக்கேட்ட சங்கராசாரியர் பயந்து
தேவரீருடைய திருவடிகளுக்கு அடியேன் செய்தவபராதம்யாது?
எனவினவினர். எம்மிடமுபதேசத்தை யடைந்தநீ முற்றும் விபரீத
மாய்க் கிரகித்து உலகமெல்லாம் அவதியிலாழ்ந்து சிவபக்தி கெட்
டலைப்பட்டொழியச் செய்தனையாகையால் அவ்வபராத மென்னை
ப் பற்றுதவழியே புன்னையென் கண்ணாலும் பார்க்க விசைந்திலே
னென்றறிவித்து, அவ்வுண்மையை நீயறியவேண்டினிதோ சற்று நே
ரத்திற் காட்டுகிறோம் பாரென்று திரைக்குள்ளிருந்தபடியே தமது
வலது காலைத் திரைக்குவெளியில் சங்கராசாரியர் பார்க்கும்படியாக
நீட்டினர். அப்போது சங்கராசாரியர் மகிழ்ந்து ஆசாரியருடைய
வொருபாதத்தைப்பாவது காணநேரிட்டதேயென்று அந்தப் பாதத்
தை வணங்கிப் பின்னர்த் தன திருகரங்களாலு மெடுத்துக் கண்களி
லொற்றிக்கொள்ளப் போயினார். அங்ஙனஞ் செய்கையி லந்தக்கால்
திரைக்குவெளியி லெவ்வளவு பாகம் நீட்டப்பட்டுத் தனது கட்புல
க்குத் தோன்ற நின்றதோ வதுவரையிலழுகிச் செந்நீர்தோய்ந்து
புழுக்கணெளிந்து காணப்பட்டது. அதனை யயர்வெய்திநின்ற சங்க
ராசாரியரைக்கூவி யென்காலில் நீட்டியவரையி லுன்கண் பட்டபா
கத்துக்கு வந்தகதி யிதுவாகுமாறு லென்னைமுற்றும் நீபார்க்கநேரி
டுங்கா லெனக் கென்னகதி யுண்டாகலா மென்பதை நீயேயோசித்து
ப்பாரென்று ஆசிரியர்கூறினர். அவ்வமல வாசகத்தைக்கேட்ட சங்
கராசாரியர் நடுங்கி மஹாபாபியாய்விட்ட வெனக் குய்வகையாதெ
ன வவரைப்பலவாறு துதித்து வணங்கி நிற்கையில், சற்றேயிரங்கி
யிம்மலவுறைப்பு இன்னுஞ் சிலதினத்தில் நீங்கும், அந்தக்காலத்தில்
நல்லசைவாசாரியர் தரிசனங்கிடைக்கும், அப்போது யாமவருடனி
ருப்போமாகையா லுனக்குத் தரிசனந்தருங் காலத்தைச் சொன்
னோம் போதியென்றனர். அக்கட்டளையைபெற்று விடைகொண்டு
திரும்பி யாதுசெய்தற் பாலதென வெண்ணிக்கொண்டிருக்கையிலே
தானே பூர்வமலத் தாக்கினுறைப்பால் பழையபடியே சைவநிந்தை
சிவாகமநிந்தை முதலிய தீமைகளிற் சேர்ந்து காலங்கழித்து வரு
கையில், சிலதினத்தில் ஆசாரியருடைய வருளுப்பாட்டின்படி ஸ்ரீக
ண்டாசாரியமூர்த்திகளைத் தரிசிக்க நேரிட்ட பிரபாவ விசேஷத்தா
ல் சமஸ்ததோஷங்களும் நிவிர்த்தியடைந்து (அபராதக்ஷமை) என்
னுங்கிரந்த மொன்றியற்றி ஸ்ரீகண்டமூர்த்திகளுக்குத் துணைவராயு
டனெழுந்தருளியிருந்த கோவிந்த பகவத்பாத மூர்த்திகளையுங்

கண்டு, அப்போது ஒருதோஷமுமாசாரியர்காலில் காணுமையால் மகிழ்வெய்தி நமதுபாபம் க்ஷயித்துப்போய்விட்ட நலத்தைக் காட்டவேண்டி நம்மாசாரியர் செய்த லீலையாகுமிதுவென வாசாரியரிடம் வைத்திருந்த அன்பினுறைப்புக்கேற்பச் சமாதானங் கொண்டு நலமெய்திவாழ்ந்தனரென்று ஸ்ரீகண்ட விஜயத்திற் கூறப்பட்டமையாலின்னதோஷங்களுமாதேவியார் பாலுண்டவரிடமுண்டாதல் செல்லாமையின், அவரம்மையார்பாலுண்டாரென்னுமசங்கதமாரம்பியமவலப்பட்டமைகாண்க. இந்தக்கதை யெழுதியநூலை யாமங்கீகரியோமெனின், அந்தக்கதை யெழுதியநூலை யாமங்கீகரிப்போமா? ஒருவரங்கீகரிப்பதும், அங்கீகரியாததும் நியாயமுகத்தாலன்றி மூடமேற்கொண்டு முரணிப்புலம்புதல் செல்லாமையி னம்மையார் திருமுலைப்பாலைத் திருஞானசம்பந்தப் பிரபு வொருவரேயன்றி யிரண்டாவது பேருமுண்டாரென்று கூறவருமவதிவாசகம் பாழ்பட்டதெனவறிக.

இதுநிற்க, சாஸ்வதியோடு காமகலையை வாதிக்க முயன்றகாலையில் அபசயப்பட்டு அவளிடம் காலவரை யேர்ப்படுத்திக்கொண்டு பின்னர் தனதுதேகத்தை யோரிடத்திற் பதனப்படுத்திவிட்டு இறந்துபோன வோரரசனது சரீரத்திற்புகுந்து அவ்வரசன் பன்னிகளைப் புணர்ந்து அந்தவித்தையின் மகாவித்வானுகிப் பின்னரவ்வாளைச் செயித்தாரெனவும், அப்படித்தான் பரகாயப்பிரவேசமாயிருந்தவமயத்தில் தனதுயதார்த்தசரீரம் தகிக்கப்பட்டதெனவும், அதையறிந்து அரசன்சரீரத்தைவிட்டு மீண்டுந் தனது சரீரத்தையேயடைந்து ஜ்வாலாநரசிம்மஹோ பாஸ்தியா லுயிர்தாங்கினரெனவு மன்னோர் புதுமை காட்டித்திரியும் சங்கரவிஜமென்னுஞ் சுவடியிலேதானே யெழுதப்பட்டிருத்தலால் அந்தமூலத்தைக் கொண்டேயவர் சிறுமையைக் காட்டாநிற்பாம். உமாதேவியார் முலைப்பாலையுண்டவர் சர்வஞ்ஞராவரென்பது உண்மை. ஆகவே, யங்ஙனமுண்டவராகவெண்ணப்படுஞ் சங்கராசாரியர் வாணிக்குத் தோற்றது பழுதாம். எல்லாமுணர்ந்தவர் பின்னரவ் வித்தையைக் கற்கவேண்டி அரசபத்தினிகளை வஞ்சனையாற் கற்பழித்துத் தனது துறவையுந்துறந்து பழிபாவத்துக் கஞ்சாமல் அன்னோர் பகவலையிற் சிக்குண்டழிந்ததுமசங்கதம். தனதுதேகம் நெருப்பாலெரிப்புண்டழியப்பெற்றதோடு சரபமூர்த்தியாற் சிட்சிக்கப்பட்டொழிந்த ஏழை, இடையன், இளிச்சவாயனென்னு மூவர்களிலொருவனுகிய விளிச்சவாயனென்னு

நாசிங்கனை யுபாசித் துயிர் தாங்கியதும் பிழையாம். இன்னுமிரிக்கில், திருவாவடுதுறை யென்னும் புண்ணியப்பதியிற் பசுமேய்ப்பானாகிய மூலனென்னும் பேருடைய வோரிடையன் காட்டில் செத்துக்கிடந்தபோது பசுக்களெல்லாம் அவனைச்சுற்றிலுஞ் சூழ்ந்து கதறுதலைக்கண்ட சிவயோகியொருவர் இரக்கமுற்று இவ்விடையனெழுந்தாலல்ல திப்பசுக்கள் துன்பக்கடனின்று மெழாவென வுணர்ந்து பேருடாங்கித் தமது திருமேனியை யோர் மரப்பொந்தில்வைத்துவிட்டு அவ்விடையன் சரீரத்திற் புகுந்தமாத்திரத்தில் பசுக்களெல்லாம் சந்தோஷத்தோடு வாலைக்கிளப்பிக்கொண் டெழும்பிக் குதித்து விளையாடினவெனவும், அதிற்பெருமகிழ்ச்சிகொண்ட வப்பெரியவரன்று முழுதும் பசுக்களை மேய்த்துக் கொண்டிருந்து மாலைப்பொழுதுவந்தபோது பசுக்களையெல்லா மூருக்குளோட்டிக்கொண்டுபோயினரெனவும், அப்போது தன்வீட்டுக்கு வராமல் தியங்கி வெளியே நிற்பவராகிய வம்முனிவரைத் தனதுகணவனாகவெண்ணி மூலனுடைய மனைவி வந்து அழைத்தகாலையி லொன்றும் பேசாது நின்றனரெனவும், அவள் தன்கணவன் கோபமாயிருக்கின்றானென்றுன்னியவருடைய கரங்களைப் பற்றவருகையிலஞ்சி யன்னியஸ்திரீயைப் பரிசிக்கமாட்டாதவராகி யோடினரெனவும், அவைகளைப் பார்த்துக்கொண்டிருந்த வப்பதியா ருண்மையைக் குறிப்பாலறிந்து அந்த ஸ்திரீக்குச் சமாதானங் கூறி யனுப்பிவிட்டபின்ன ரந்தமுனிவர் தமது சொந்ததேகம் வைத்திருந்த விடத்திற் போய்த்தேடியபோது அதுகாணாமற் போய்விட்டதெனவும், அப்போதிவ்வதிசயம் யாதென யோசிக்கையில் சிவபெருமான் அசரீரியாக வுன்னுடைய தேகத்தை யாமேமறைத்தோம், நீசிலகால மிந்தத்தேகத்திலேதானேயிருந்து லோகோபகாரமான சிலகாரியங்களைச் செய்துவரவேண்டிநமது ஆக்ஞையென்று கட்டளையிட்டதை யேற்று அந்தப்பதியிலேதானே மூவாயிரம்வருடம் ஓரரசடியில் யோகிருந்து ஒருவருடத்துக்கொருதரம் பகிர்முகப்பட்டு அவ்வநுபூதிப்பிரகாசமாக வொவ்வோர் திருமந்திரத்தைக் கட்டளையிட்டு மூவாயிரம் வருடத்தில் மூவாயிரமந்திரங்களை யருளிச்செய்தாரெனவும், அந்தமந்திரங்களே திருமந்திரமென்னும் பெயர்த்தாய்ச் சைவம் பன்னிரண்டுதிருமுறைகளில் சேர்க்கப்பட்டுள்ளதெனவும், அவரே திருமூலர் என்னும்பெயர் தாங்கி அறுபத்து மூன்றுநாயன்மார்களி லொருவராய்த் துதிக்கப் பெற்றிருக்கின்றனரெனவும் சிவரஹஸ்யம், பக்தவிலாசமுதலிய வுண்மைநூல்களிற் பயிலும் சிவஞானிகள் துணிந்துகூறுவரே

யிவ்வருஷமப்பாட்டி லெந்தவமிசத்தி லிவரைப்போலவே பரகாயப்
பிரவேசஞ்செய்தவராகச்சொல்லப்படுஞ் சங்கராசாரியர் கதையைச்
சமர்த்திக்கக்கூடும்? அன்னியனுடையஸ்திரீயை வலிந்து வஞ்சத்தா
லநுபவித்தவொருவரும், அவள் தன்னைத் தொடவே யிணங்காதவ
ராகிய மற்றொருவரு மெப்படியோ சமானமாவர்? விஷமும், அமுத
முமெப்படி யொற்றுமை யடையும்? இரண்டும் விஜாதிகங்களாகை
யால். சங்கராசாரியரும், திருமூலதேவரும் பரகாயப்பிரவேசசித்தி
யுடையா ரெனக் கொண்டகாலத்து மிருவர் தாரதம் யங்களும்
வெளிப்பட்டமையால், திருமூல தேவருக்குமுன் சங்கராசாரியர்
சருடனுக்கு முன்னே பசுவொன் றுவமிக்கப்படுந் தன்மையே நித
ரிசனமாம். இந்த விசாரத்தா னிர்மிதமான வாபாச குணக்ஞராகிய
சங்கராசாரியை யெப்படியோ வம்மைதரும்பா னுண்ட வாதிக்யமு
டையராய் மதிப்பது? இன்னுமச் சங்கராசாரியர் மாங்மியத்தை
நோக்குழி அபிநவகுத்தனென்னு மாந்திரிகனொருவன் சங்கராசாரிய
ருக்கு ஏவல்வைத்தானெனவும், அது அவருக்கு மூலவியாதியாய்ச்
சென்று தாக்கியதெனவும், ஓர்நா ளவர்மாணாக்கரு ளொருவர் அ
வருடைய காவியுடையைத் துவைக்கப்போகையி லவ்வுடையி லு
திரத்தைக் கண்டு மயங்கித்தனது குருவுந்தானுமாக வேண்டிய சிகி
ச்சைகளெல்லாஞ் செய்துபார்த்துந் தீராம லவதிப்பட்டுக்கொண்டி
ருக்கையி லதுவந்து தங்களைச்சார்ந்த காரணத்தைப் பின்னர் தெரி
ந்துகொண்டார்களெனவும், அப்போது சங்கராசாரியருடைய மற்
றொருமாணாக்க ரந்தநோயைத் தனது மந்திரவலியாற் றிருப்பி முன்
னதை யேவியவன்பக்கல் சேரும்படிச்செய்து தனதுகுருவுக்கு
நோயினின்றுஞ் சொஸ்தமுண்டாக்கினரெனவு மச்சங்கரவிஜயத்
தி லெழுதப்பட்டிருத்தலால், சங்கராசாரியர் மகிமை யதிகப்பிரகா
சத்தை யடைந்தமை வெளிப்பட்டது. இப்படிப்பட்ட வாபாசங்க
ள் ஞானசம்பந்தர் மாங்மியத்திலுண்டா? எவனொவொரு கடுவீதி
யானிட்ட சூனியத்தின்மொத்துண்டு வருந்திய சேயின்றலையி னூர்க்
குருவியின் றலையிற் பனங்காயைச் சுமத்தியதுபோல் உமாதேவியா
ர் முலைப்பாலுண்டு முதியரானரென் றங்ஙோ அவர்க்குமுழுப்பட்ட
ங்கொடுப்பது மூடம்! மூடம்!! அவர் மலதேகியாகையா லவரைச்
சூனியமும் பற்றும், பேயும்பிடிக்கும், வேண்டிய பீடைகளுஞ் சா
ரும். தற்போதத் சீர்த்தியினராகு மவரை ஞானத்தலைவராகு நங்கா
நீப் பிரானோடு சமம் பாராட்டவாவது, ஞானசம்பந்தரைத் துதித்

தா ரென்றதனு லவர்க்கொரு தாழ்வுண்டாவதாகவெண்ணி அதைப்
பரிகரித்துக் கொள்ளவாவது, உமாதேவியார் தந்த பாலையுண்டு அ
ருள்பெற்றதன்னையே சௌந்தரியலஹரியில் சங்கராசாரியர் வியந்
துகொண்டனரெனப் புகழுவ-வது வழிதேடுதல் செல்லாதென
வறிக.

இது நிற்க, சங்கராசாரியர், தத்துவராயர் முதலினோர் ஞானச
ம்பந்த மூர்த்திகளைத் துதித்தா ரென்றது கொண்டே யன்னோர் ஞா
னசம்பந்தரை நோக்கத் தாழ்ந்தவராகா ரெனவும், தாழ்ந்தவ ரெ
ன்றே கொள்ளுங்கால் (அப்பாலுமடிச்சார்ந்தாரடியார்க்குமடியேன) என
வும், (பத்தராய்ப் பணிவார்களெல்லார்க்குமடியேன்) எனவுந் துதித்த ஸ்ரீ
சுந்தர மூர்த்திகள் சைவசமயிகளை நோக்கத் தாழ்ந்தவராவ ரென
வுஞ் சமாதானங் கூறிச்சிலர் மயங்காநிற்பர். இவ்விபரீதத்தைக் களை
ந்தெறிவாம். ஞானசம்பந்தரைத் துதித்த சங்கராசாரியரும், தத்
துவராயரும் அவரிற்றாழ்ந்தவ ராகாதபோது சங்கராசாரியையும்,
தத்துவராயரையும் பரிந்தழ வந்த வக்கபோதிமக்க ளவரிற்றாழ்ந்த
வராவதெப்படி? சம்பந்தமூர்த்திகளோடு சங்கராசாரியும், தத்துவ
ராயருஞ் சமானராய் நின்றபடிச் சங்கராசாரியர், தத்துவராய ரிவர்
களோடு அப்பாலிசருஞ் சமானதுல்யரே யாயினர். எனவே, முத்
திறத்தவருமேற்றாழ்வில்லாதவ ராயினரென்பது வெளிப்படை.
ஐயோ கலிகாலப்பண்பே! இது என்ன புதுமை? சம்பந்தமூர்த்திக
ளைச் சங்கராசாரியேயன்றிப் பெரியவாளாய் வந்தவர்களிற் றுதித்
து வணங்காதபே ரொருவருமில்லையே! அந்த மூர்த்திகளைச் சிவால
யங்கடோறு மெழுந்தருளப்பண்ணிப் பூசித்துவருவதும் அநுபவ
மாமே! அவர் மான்மியங்களை வேதசிவாகமங்களும் விதந்துரைக்கி
ன்றனவே! இன்னவற்புதச் சீர்ப்பாட்டினராகுஞ் சமயத்தலைவரை
யா சாமான்யஜந்துக்களாகிய சங்கராசாரியர் தத்துவராயர் முதலி
னரோடு சமத்வங் கூறற்பாலது? அவர் சைவத்தலைவரா யெழுந்தரு
ளிய காலத்தும் அவர்கொடுத்த விபூதிப்பிச்சையையேற்று வாழும்
அன்னிய சமயிகளுமன்றோ வவரைத்துதித்து வாழ்ந்தனர்? "நத்வா
சுந்தர வாகீசஸ் ஸம்பந்தாதி புராதநஃ" என்று சோமநாதபாஷ்யத்திற்
கூறப்பட்டிருத்தலேசான்றாம். இப்படிப் பலவுளவற்றை விரிவஞ்சிவி
டுத்தாம். திருநெல்வேலியென்னுந் தலத்திற் றவங்கிடந்திருந்த வகத்
தியர்க்குத் தரிசனங்கொடுத்து அவரால் பூசிக்கப் பெற்றெழுந்தரு
ளிய மூர்த்தமேயன்றோ. இப்போதும் சம்பந்தமூர்த்திகள் கோயில்

என்று பிரசித்தமாய் வழங்கிவருமாலயத்திலமர்ந்து காணப்படுவ
து? இன்னும், திட்டையென்னும் பேரையுடைய தலமாந்மியத்தை
விசாரிக்கினும் அவர் மாந்மிய மினிதுவிளங்குமே! எங்ஙனமெனின்
திட்டையென்னுந் தலத்துக்குத் திருஞானசம்பந்த சுவாமிகள் சு
வாமி தரிசனத்தின்பொருட்டு ஓர்கா லெழுந்தருளியபோது அவ்
வாலயஞ்சூழ வசுத்தங்க ளதிகமாய்க் காணப்பட்டன. அப்போது
அந்தப்பதியில் திருநாவுக்கரசு சுவாமிகள் கைத்தொண்டு செய்து
கொண்டிருந்தனர். அவரைக் கண்ட காழிவிரகர் தம்மை வந்து வ
ணங்கிநின்ற வாகீசமுனிவரை யெதிர்வணங்கித் தேவரீருடைய திரு
ப்பணியை யேற்கு மித்தலத்தி லசுத்தங்க ளுண்டாயிருக்குங் கார
ணமியாதென வினவினர். அதற்கவ ரிவ்வாலயத்தை யடுத்த பெரு
மாள்கோயில் வைணவப்புல்லரே யிக்கெடுதியை விளைக்கின்றவ ரெ
ன்றிசைத்தனர். அதைக்கேட்ட நங்குருமணியாவா ருடனே யொ
ருதிருப்பதிகங் கட்டளையிட்டனர். அப்பதிகவுண்மையா லப்பொ
தேயொரு பிரவாகம்வந்து அந்தப் பெருமாள்கோயிலை யடியோடே
கெல்லித் தெப்பம்போல வடித்துக்கொண்டுபோய்த் தூரமான வோ
ரிடத்தி லொதுக்கிவிட்டது. இவ்வற்புதவாயிலாய்ச் சிவாலயத்தில்
நேரிட்டிருந்த வசுத்தத்தைப்போக்கி மகிழ்ந்து இச்சையின்வழி
யெழுந்தருளிப் போயினரென்று ஷை தலமாந்மியத்திற் கூறப்பட்
டிருத்தலுங்காண்க. இவைகளையன்றி, விஷ்ணுவுக்குச் சிவசாரூப்
பியத்தைப் பிரசாதித்தவுண்மை சநற்குமாரசங்கிதை முதலியவற்
றா லினிதுவிளங்கும். இப்படி யின்னுமநந்த முளவாகவி னந்தோ விவ்
வுண்மையை யறியாதார் வினையிருந்தவா றென்னேயாச்சரியம்! ஆ
ச்சரியம்!! இந்த மாந்மியங்கள் பெரியபுராணத்திற் பெறப்பட்டன
வோவெனின், பெறப்பட்டனவாகவே கொள்ளப்படும். எங்ஙனமெ
னின், பெரியபுராணத்தில் ஆசாரியர் மகிமைகளைக் கூறிவருஞ் சந்
தர்ப்பங்களில் பதிகங்களை யுடன்கொண்ட மகிமைகள் பலவுளவாத
லாலவற்றை விரிக்குங்கா லிறந்துபோன பதிகங்களை யுடன்கொண்
டமான்மியங்களை விடுத்து இப்போதிருக்கும் பதிகங்களை யுடன்
கொண்டமாந்மியங்களை மாத்திரமே தொண்டர் சீர்பரவுவா ரெடுத்
தாண்டனர். சிலபதிகங்க ளிறந்துபோயின வெனவும், அவற்றால்
விளங்கற்பாலனவாகிய மாந்மியங்களுள வெனவு மவருடன்பாடா
கையால் யாவும் அவர் நூலுக்கொப்ப முடிந்தனவாகவே மேலோர்
கொண்டுரைப்பர். (பாலைநெய்தல்பாடியதும் பாம்பொழியப்பாடியதும்) எ

ன்னுஞ்சித்தாந்த சாத்திரத்தில் விரிக்கப்பட்டமாங்மியம் பெரியபுராணத்திற் பெறப்பட்டதின்றாம். பெறப்படாமை கொண்டு எதைத் தள்ளுவது? எதைக் கொள்ளுவது? இரண்டும் சப்பிரமாணமாய் முடிதலால் மேல்யாம் காட்டிய நியாயமே சமர்த்திக்கப் பட்டமைகாண்க. ஒன்றி லொன்று எப்போது முரண்பாடாகக் கொள்வாமெனின், ஒரு விஷயத்தையே யிரண்டு நூல்க ளொன்றி லொன்று விரோத முண்டாகக் கூறுமேல் அந்த நூல்களின் சாமானிய விசேஷ தருமங்களை நோக்கிச் சாமானியத்தைக் கழித்து விசேஷத்தையே மேலோர் கொள்வ ரென்க. ஒருநூலிற் சொல்லாத விஷயத்தை மற்றொரு நூல்சொல்லுவதனா லொன்றுக் கொன்று விரோத முண்டாகாமையால் பெரியபுராணத்திற் சொல்லப்படாதனவாகிய மேல்காட்டிய மாங்மியங்கள்யாவு மங்கீகாரமாயிற்று. இன்ன விசாரத்தாற் புகழப்பட்ட பெருஞ்சீராளனாகிய நங்காழித் தலைவரோடு அநாமத்துராயர்களாகிய சங்கராசாரியர், தத்துவராயர்களையுஞ் சமம்பாராட்டி விவகரிக்க வந்த சிறுவர் கூற்றுச் சிதைவுண்டதெனவறிக. சங்கராசாரிய ரென்னை, விஷ்ணுவைக் காட்டிலும் பெரியவரா? அகஸ்தியரைக் காட்டிலும் பெரியவரா? சங்கராசாரியர் பிழைப்பெல்லாம் அவர் சங்கா விஜயத்தால் விளங்குமே! மந்திரவாதிகள், சூனியவாதிகள் கையிலெல்லாஞ் சிக்கிக்கொண்டு அவர்களைமீறி வருவதற் கவர்ப்பட்டபாட்டுக் களவின்றே! தத்துவராயரோவெனின், "புத்தாபுலையேனைக்கா" எனவும், "அருகாவடியேனைக்கா" எனவுஞ் சந்தேகப்பிராணியாய்ப் பலவுமி தின்றா லொருஅவிழ் தட்டாதாவென்று வாயில்வந்தபடிக் கெல்லாங் கைகொண்டது, எடுகண்டது என்று தமது ஞானத்தை விளக்கினவராகையா லவர்திறப்பாடும் வெட்டவெளியாயிற்று. இன்ன சாமானிய பசுக்களா வெம்பாலறுவாயரோடு சமம்பாராட்டத்தக்க பண்பினராவர்? இனி, "அப்பாலுமடிச்சார்ந்தாரடியார்க்குமடியேன்" எனவும் "பத்தராய்ப்பணிவார்களெல்லார்க்குமடியேன்" எனவும், ஸ்ரீசுந்தர மூர்த்திகள் அதித்ததனா லவர் சைவசமயிகள் பலருக்குந் தாழ்ந்தவரா மென்னுஞ் சங்கையைப் பரிகரிப்பாம். "தாவரசங்கமங்களென்றிரண்டுருவினின்று, மாபரன் பூசைகொண்டு மன்னுயிர்க்கருளைவைப்பன்" என்னுந் திருவாக்கால் சிவலிங்கவடிவமாகிய தாவரத்தினிடமாகவும், சிவனடியார் வேடமாகிய ஜங்கமத்தினிடமாகவு மிருந்தே அடியாரியற்றும் பூசையையேற்றுச் சிவபெருமானருள்வழிரண்டது வெளிப்பட்டது. இவற்றுள், தாவரம் அசேதனமும், ஜங்கமம் சேதனமுமாதலால் சேதனாசேதனங்கள் வாயிலாய்த் தன

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ ஜ்ஞாநசம்பந்தகுருப்யோநம:

சித்தாந்தரத்நாகரம்.

சிவதத்வசிந்தாமணி.

இஃது

"வைதிக சைவ சித்தாந்த சண்டமாருதம்"

ஸ்ரீ ல ஸ்ரீ

சோமசுந்தர நாயக ரவர்களால்

இயற்றப்பட்டு

ஷையார் மாணவகர்

ஸ்ரீமாந்-பல்லவபுரம்

அப்பாவு செட்டியா ரவர்களால்

பரிசோதித்து

தமது

சென்னை:

வித்யாபாஸ்கர அச்சியந்திர சாலையிற் பதித்து

வெளியிடப்பட்டது.

Second Edition.

30 **April** *1906.*

Copy-right Registered.

காளமேகர்,— (காலொடுகை யுஞ்சிரமுங் காட்டகத்தே வெந்தபின, மாலைச் சகாரதம் வைத்தேத்தல், சூல-மழுப்படையான் பாதம் வழுத்தாதெந் நாளும், பழிப்பதனுல் வந்த பலம்.) என்றனர்.

பூர்வபட்சம்.

"வேதியர்க ளாய்ப்பிறந்தும் மெய்யிலிலிங் கம்பொறுத்தும்
பூதியரன் கண்மணியின் பூணணிந்த - பாதகரை
நீதியர சன்ற னிலத்தின் புறம்விடுக்க
வோதிடுமே நூல்க ளொருங்கு." (௫௪)

சித்நாந்தம்.

ஜாபால மாதிகவிற் சாற்றுமே நீற்றையெழிற்
* கோபால மாமணியுங் கொண்டிடவே - காபாலி
யெங்கோ னிலச்சினையா மீதுரைநின் மண்ணேவியந்
தெங்கேவே தத்தி லெடுத்து. (௫௫)

வெள்ளைமண் யோனி விரிபுண் டாந்தாங்கி
யெள்ளுவது நீற்றையுனக் கேற்குமே - விள்ளுஞ்சா
லேத்துந் ததீசிமுனி யிட்டசா பங்கண்டாய்
கார்த்தபமே சம்ப . ௺ கத்து. (௫௬)

காளமேகர்;—"தம்மூணர்ந்தோர் நீறுநுதற் சார்பின்றி யேயணிவர், தமழூணரார் மண்குழைத்துத் தந்நுதலில் - தம்மறிவோர், ஆடியுளே நின்றுங் கதிவித்த பின்னான்றே, நாடியிவெர் நயந்து" எனவும், "உற்றநெடு மாலடியை யோது மவனடியை, பெற்றவர்க ணெற்றியிடல் பெற்றியே - மற்றவன்றன், பாதமவன் றனது பாவத் திடுவதன்றோ, பாதகஞ்செய் பாடண்டரே." எனவும், "நீறில்லா நெற்றிபா ழென்றவ்வை நீதிநூல், தேற வுரைத்தாளச் சீர்மையிறே-னீறென்றே, நற்கருமத் திற்காகு நாமங் குழைத்திடுதல், துற்கருமத் தோர்செய் தொழில்." எனவும், "எற்றுனை யாழ்வா ரியம்பியநா லாயிரத்துள், நீற்று னெனவுரைத்த நேர்மைபோல் - வேற்றுமையின், றேதிடுநா மத்தானென் றேனுரைக்க வில்லையெனில், ஆதிசைவன் மாவாத லால்." எனவும், "மோசப்பட் டாளொருவன் மோசஞ்செய் தோற்கண்டு, பூசப் படாநாமம் போட்டனையென் - றேசுமொழி, வையப்பா வாணர்களு மற்றவரும் பாராட்டல், ஐயப்பா டேனறிவீ லீர்." எனவும், "அடகோவென் றேபுலம்பு மையவுணக்குச், சடகோப மார்தரித்தா ரென்றே, யடைவாகத், தொல்லாழி சூழ்புவியோர் சொன்றுதொட் டேசமொழி, கல்லா திருப்பதென்ன காண்." எனவு

* கோபாலமாமணி=நெற்றிக்கண்மணி.

ம், "அருத்திகொளத் தாசர்க் கடலாழி சங்கம், நெருப்பிட் டிருதோ ணிறுவ-வெருக்கொண், டுளம்புழுங்கும் போதி லுரைக்குமந் திரங்க, ளுளம்புகுமோ சொல்லீ ருவந்து." எனவுங்கூறினர்.

பூர்வபட்சம்.

"சத்திரயா கந்தன்னிற் றக்கன் பிருகரற்கு
வைத்தகொடுஞ் சாபத்தான் மாமறையோர் - இத்தலத்தில்
சங்கரனின் மாலியமுந் தானுகர்ந்த போனகமும்
அங்கி கரியா ரறிந்து." (௫௭)

சித்தாந்தம்.

நின்மா லியப்பகுதி நீயோ வறிந்திடுவாய்
துன்மார்க்கம் பேசத் துணிந்தனையே - சன்மார்க்க
மில்லாய் நிவேதிதமே யேற்குமிதன் வேறான
வெல்லாங்கொள் ளாந்தோட மே. (௫௮)

பிராமணர்க ளுச்சிட்டம் பேணியிடன் மண்ணில்
பிராமணரைக் கேட்டறிந்து பேசாய் - பிராமணருஞ்
சம்புவினின் மாலியத்தைச் சார்ந்துண்ணார் காலத்தால்
பம்புமறை யோர்விதியைப் பற்று. (௫௯)

அந்தணர்கண் மாலா மரசனுச் சிட்டமதை
யெந்தவிதி யாற்கொள்வ ரேற்குமோ - அந்தணர்க
ளெல்லாரே கொண்டிடுவ ரந்தோ மறைவிதிக்கும்
பொல்லாப்பில் லாதென்முன் போ. (௬௦)

சிவாதித்ய ரத்நாவளி முதற்பாகம்-இரண்டாம் பாகங்களில் பரக்கக்கண்டு தெளிக.

பூர்வபட்சம்.

"மோகனநூல் பல்சமய முன்னியற்றுந் தீயவினை
போகநறு நாவலின்கீழ்ப் போந்துமையாள் - பாகனன்னீர்
பம்புசி ரரங்கற் பணிந்துதவஞ் செய்ததன்றோ
ஜம்புகே சரப்பேர்த் தலம்." (௬௧)

சித்தாந்தம்.

ஆடினு ளன்றோ * பொன் னஃதே திருவரங்கம்
நாடியரன் முன்பாக நண்புகூர்ந் - தாடிடவே

* இலக்குமி

செய்தானின் மாலுஞ் சிவனுமருள் செய்தானே
வைதநூலென் கண்டாய் வரும். (௬௨)

நின்மால்பா டண்ட நிறுவினு னென்பதனை
யென்மேற் பழிகூற லேற்குமோ - கன்மாலன்
றன்னேன் றடிப்புத்த னானகதை நீயன்றோ
சொன்னாயென் முன்றோன்றி யே. (௬௩)

காளமேகர்;—(பாடண்ட மோகனநூல் பார்மயங்கச் செய்திமோல், தோட் மகலவில்வ நீழலுன்னி, மூடிகந்தை, யூர்ந்தானடியை யுபாசித்த காரணத்தாற், சார்ந்த துசீரங்க தலம்.) என்று கூறினர். "ஏங்குவாழ்தலே யன்றிமற் றிலங்கையிற் படரேன், நீங்கிலா நட மிலக்குமி செய்யுமா றியக்கி, யோங்கு நாவலி னொருவனூர் திருவருள் பெரிதுந், தாங்கு மார்வமுந் தழுவிய நெஞ்சினேன் கண்டாய்" எனவும், "திருவின் மாதரா னடகஞ் செய்யுமித்தானத், திருவமாநக ரொன்றுசீ ரங்கமென் றுளதா, மருவுசீரங்க நாதனொன் றெமக்குரை வழங்கும், பொருவில் பூசனை விழாமுத லெமக்கிவட் பொலியும்." எனவும் விபீடணனை நோக்கி விண்டுமூர்த்திகூறிய வுண்மை திருவானைக்கா மான்மியத்திற் போந்தமையறிக.

பூர்வபட்சம்.

பொன்னிலங்கு மெய்யன் பொருவலிசேர் வாலியொடு
தென்னிலங்கை கோமான் றிறல்வாணன் - முன்னானைத்
தாழ்ந்து பெறுவரத்தைச் சாற்றிடலும் வேண்டுமோ
வாழ்ந்துவிடிந் திட்டினரே வாய்ந்து."

சித்தாந்தம்.

ஆடகமெய் யான்வாண னாதியரை மால்வென்ற
தேடலர்கொன் றைத்தாரா னின்னருள்காண் - மூடவுரை
செய்தா யறியாமல் சிற்றறிவி னையந்தோ
எய்தான்கோ லாய்மாலே யே. (௬௫)

வாலி யெனுங்குரங்கை மால்வென்று னென்னையவன்
மேலடைந்த சங்கத்தில் வேடுவனைச் - சூலியருள்
பெற்றானே மால்வீழப் பெய்தான் சரமொன்றை
யெற்றோநின் மால்வெற்றி யீங்கு. (௬௬)

காளமேகர்;—“மலையா யணுவாய் மதிமுதலாய்த் தானாய், நிலையாய
மெய்ப்பொருளாய் நின்ற, மலைவில்லான், றன்னுபதே சத்தன்றோ தாசரதி
யன்றிலங்கை, மன்னனைமாய்த் தானென்னு மாண்பு” எனவும், “ஈருருவ
மொன்றா யிருத்தலா னனீ, தாருகத்திற்பூண்டு சமர்செயிலோ, பாரதிய
வாலிமடிய வதைத்திடவே னென்றுரைத்த, மாலறிஞ னவனே மற்று.” என
வும், “மாயன் மறைந்திருந்து வாலிதனைக் கொல்லவவன், றூய வனைசானைத்
தோன்றியந்த, மாயவனைக், கொன்றகதை பாரதத்திற் கூறக்கேட் டிலையோ,
பொன்றிடமா லைப்புகழு வீர்” எனவும், “பைந்துளவத் தோனைப் பரத்துவ
னென் றேயரிய, விந்தைமகத்தில் விளைந்தழைத்தே, சந்ததமும், தாழ்ந்த ச
டையாதன் றக்க னெனுமிருவர், வாழ்ந்தனரே வையக” எனவுங்கூறி
னர். அன்றியும், “வேதந் தவமுனிவோர் விண்ணோரைச் சாட்சிகொளா
தேதமிரு கத்தோ டிராக்கதனை, மேதினியில், சான்றெனவே கொண்டங்
தோ சாதிப்பீர் நால்வேத, மூன்றியறி யாவுணர்வி லீர்.” எனவும், “கருங்
கல்லிற் றேரை கலந்திருந்தாற் போலப், பெருங்கம்பத் தூண்மால் பிறத்தற்,
கிரும்புவியிற், சின்னாஞ் சிறுசேயைத் தேடினீர் சான்றாக, வென்னமதி கொ
ண்டோ வியைந்து” எனவும், விஷ்ணு பிரஸாதம் பெற்றோர் சிறுமை
யெடுத் தோதினமையு மறிக. இவ்வுண்மையைப் (பசுசிசு கவதூ ரா
க்ஷஸாஸ் ஸாக்ஷிணோ) என்று தீக்ஷிதஸ்வாமிகள் வெளிப்படுத்தி
னமையானுங் கண்டுதெளிக. மேல் விஷ்ணு வாதிக்கங்க ளெல்லாஞ்
சிவனாலும், சிவபிரஸாதம் பெற்ற வடியவராலுமே மாட்சிபெற்றன
வென்பதைப் பின்வெண்பாக்கள் காட்டும். “சாப மடைந்ததனிச் சக்
கரத்தால் வெய்யோனைச், சேபதிமுன் னையமறைத்த தோர்சிறப்போ, மாபுக
ழ்சேர், செய்ய நளாயினியாற் செங்கதிர்பன் னாண்மறைந்த, வுதயமற யாவ
றியார்” எனவும், “துருவாசன் சாபத் தொடர்பினை வாழி, யிரவி தனைமறை
த்த தென்றே, யுரைசெயுமே, நான்மறையை நன்குணரு நுண்ணறிவி லீர்
வாளா, மான்மறைத்தா னென்பீர் மயங்கி” எனவும் போந்தவற்றால் சிவ
ப் பிரஸாதமடைந்த துருவாசர் மகிமையும், நளாயினி மகிமையுமே
வெளிப்பட்டன. “அகலிகையைக் கல்லா வமைத்த முனிவன், புகரில் வி
மோசனமப் போதே, புகன்றிருக்க, கல்லுருவைப் பெண்ணுருவங் காட்டினான்
மாலென்றே, சொல்லும்வகை யாதோ துணிந்து” என்பதனாலுங் கவுதமரா
திய சிவனடியார் மகிமையே வெளிப்பட்டது. இனிப், “பாஞ்சாலி மூற்
பிறப்பிற் பண்ணவனைப் பெற்றிட்ட, வாஞ்சீர் வரத்தா னவைதனிலே, வாஞ்
சையுற, மானாத் துகிலவட்கு வந்ததைமா லீந்ததென, வாளாவுரைப்பீர் மகிழ்
ந்து” என்று ஸ்ரீசிவபெருமான் பாஞ்சாலிக்கு நளாயினியான முற்ச
னனத்திற் பிரஸாதித்த மகிமாதிசயமே கூறினமை யறிந்திடுக. இன்
னும், பாஞ்சாலியோர் சிவனடியாருக்குக் கோவண மோர்காலத்திலு
தவி, அவர் மானத்தைக் காத்தனளென்பதுமே யன்றோ வவளுடை

ய மானங்காக்கப் பட்டதற்குப் பிரதியாக வம்முனிவர் பிரஸாதித்
தருளினரென்று மேலோர் கூறுநிற்பர் ?

பூர்வபக்ஷம்.

"யாருமறிய வெசுருவே தாரணமெய்
யாருமொழி யாளனென வாய்ந்துரைக்க - வோர்வின்றி
வேதவியா சன்பொய் விளம்பக் கரந்தம்பித்
தேதமுறு நின்றதென்ப தென்." (௨௭)

சித்தாந்தம்.

பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயப்பினென நாயனார் - சொன்முறைதேர்ந்
தோதினன் மால்பரனென் றோர்புளுகை மாலேவந்
தோதுவான் வாய்மையென வோர்ந்து. (௨௮)

இன்னஞ் சிவநிந்தை யேற்றுவார் தண்டமுறல்
தன்னிடங்காட் டத்துணிந்த தன்மையால் - அன்னவன்கை
தம்பித் ததுதந்தி தண்டித்தான் மாமுநனி
நம்பச்செய் தான்சிவனை நாடு. (௨௯)

காளமேகர்;—"பங்கயக்கண் மாலைப் பரத்துவனென் றேவியாதன்,
கங்கைக் கரையுரைத்துக் கைநாவன் - றங்கவற்குத், தம்பிக்கமால்வந்து சங்க
ரனே யெவ்வுயிர்க்கு, மெம்பிரா னென்று னினி." என்றனர்.

பூர்வபக்ஷம்.

"முனிவ ரெழுவர் முதுபரா சன்செம்
பணிமலரா னுள்ளிட்ட பல்லோர் - இனிதாய்த்
திருமால் பரனென்னச் செப்பினரன் மேலாக்கேன்
பெருநாத்தம் பிக்காத பெட்பு." (௩௰)

91093

சித்தாந்தம்.

திருமால் பரனென்னச் செப்பினரோ ரேவா
லொருவார்த்தை யேனு முரையாய் - கருவாமை
நீங்கும் படிமுனிவர் நின்மாலே சங்கரனுக்
கோங்குபரஞ் சொன்னா னுவந்து. (௩௧)

தக்கன் சிவநிந்தை தானிழைத்தன் றேதலையை
யக்கணமே போக்கிக்கொண் டானதனால் - மிக்கசிவ
நிந்தைக் கொதுங்குவரே நீடுமுனி வோருமெவர்
விந்தைக்கே னுஞ்சொல்வார் மேல். (எஉ)

பூர்வபட்சம்.

"ஓதுமுனி மால்பரனென் றேதமாழ் கிச்சினந்து
போதுநந்தி மாமுகத்திற் பொன்னடியால் - வாதமேசய்
முன்னுதைத்தா னந்த முறைமையாற் கங்கையெருத்
தின்முகத்தன் னேன்பிறங்க லீங்கு." (எங)

"மாருதிசீர் பாதமுகம் வாய்க்கப் பெறுநந்தி
சீருதவு மால்பரனைச் சிந்தைசெய்யுங் - காரணத்தால்
பேர்கங்கை மாட்டைப் பெருமாண்மா டென்னவுல
கோருரைப்பர் சோரா துணர்ந்து." (எச)

சித்தாந்தம்.

தாசரதிக் காவிலிங்கந் தான்வேண்டிச் சென்றநுமான்
ஈசனெதிர் நந்திக் கிலானுன் - காசியிலன்
றன்னேனை நந்தியுதைத் தானென்ப தற்கோநீ
சொன்னய்மா ருகவெறுஞ் சொல். (எ

பெருமாண்மா டென்றுலகோர் பேசுவது பொய்யோ
பெருமாண்மா டானமைக்குப் பேதாய் - பெருமாளா
மம்மாடு தன்னெற்றி யாரவது மற்கபாத்த
வம்மாலைக் காத்தகுறி யாம். (எ

பூர்வபட்சம்.

"பிறப்பிலியாய்த் தானிருந்து பேருலகின் மாயோன்
உறப்பிறக்கு மென்றுமறை யோத - மறந்துநீர்
அச்சுதனைச் சாதமுடை யானென் றறிவிழந்து
பிச்சரிற்பி தற்றுவதென் பேச்சு." (எஎ)

சித்தாந்தம்.

பிறப்பிலியோ பேதாய் பிறக்கும்பல் யோனி
பிறப்பிலிதா னிங்கே னிறக்கும் - மறப்பிணமா

யன்றுசுட்ட தின்று மகப்படுமே மாயனுட
லென்றுஞ் சகநாதத் தேய்ந்து. (௭௮)

மரிக்கும்பொய்த் தேவர்களை வாழ்த்துமே வேதம்
சிரிக்க வமரரெனச் சேர்ந்தே - யரிக்குமது
போலன்றோ வச்சுதநா மம்புகலுங் கண்டாய்நின்
மாலன்றோ மாலை மதித்தல். (௭௯)

பூர்வபட்சம்.

ஆய வறத்தை யறவோரை யாக்கவும்வெந்
தீயர்தமைப் போக்கவுமே திண்புவியில் - மாயுகங்கள்
தோறுமுற்ப விப்பனெனத் தொல்கீதை யிற்கண்ணன்
கூறுமொழி தேர்ந்திலிரோ கூர்ந்து.” (௮0)

சித்தாந்தம்.

அறவோரை யாக்கியஃ தல்லாரைப் போக்க
லறமாகு மெம்பெருமாற் கன்றே - யறமில்லாய்
கீதையிலே கண்ணன் கிளத்தியது ஸோஹத்தா
வீதுணர்தி கண்டா யிசைந்து. (௮௧)

கீதைகொழு னன்மகிழச் செப்பினன் சம்புவுயர்
கீதையதைத் தானன்றோ கேட்டபடி-வாதைகெடக்
கண்ண னருச்சுனற்குக் கற்பித்தா னீதறியா
தெண்ணுவதென் வேறு விசைந்து. (௮௨)

கேட்டதிலை யோபிரம கீதையது வும்ஸோஹ
நாட்டமுற லாலெல்லா னனெனவே - நாட்டுமே
பிரமன் * பலபேரும் பேசுவர்கா ணீதே
யரனுக்கன் பாகி யணைந்து. (௮௩)

காளமேகர், (ஆயவமா ரறவோரைக் காக்கவும்வெந், தீயவசுரர்தமை
ச் செற்றிடவுந், தூய, விதிமா லுருத்திரனை வெள்ளிமலை நாதன், உதவின
னென் றேதுமறை நூல். என்றனர்.

பூர்வபட்சம்.

“உடையானுக் கன்றி யுடைப் பொருளைக்காக்கப்
படையார் தமக்குண்டோ பாரம் - அடைவாகச்

* வா…தவர் முதலினோர்.

சீதனார் காக்கத் திருவவதாரஞ் செய்வர்
சேதனருக்கெனச் செயல்." (௮௪)

சித்தாந்தம்.

உடையா னுடைப்பொருளை யோர்மொழியே காக்கும்
படையாரன் றோநடுங்கிப் பண்டா - லடைவாக
வேற்றுப் பணிசெய்வா ரெவ்வெவ் விடத்துமிருந்
தாற்றலிலாய் காணுதியிக் கால். (௮௫)

பூர்வபட்சம்.

"விச்சுவவ ரன்சகனு மேலோன் சமதங்கி
யச்சுவத்தா மன்னருமா னெவ்வுறுவன் - மெச்சுபுகழ்
பொங்குதுரு வாசன் பொலிசை கிடாவியனார்
சங்கரன்பி றப்பன்றோ தாம்" (௮௬)

"அங்கி யமன்வாயு வாகண் டலன்முதலோர்
இங்குதித்த தோற்றங்கள் யாவையுமே - பொங்கறிவின்
மிக்கவர்கண் மாண விளம்பினரோ வில்லையச்
தொக்கு மரண்பிறப்புக் கும்." (௮௭)

சிந்தாந்தம்.

சுகரா தியர்சிவனைச் சொல்வதெவன் பேதாய
சுகர்முதலோ ரன்பிற் சுழன்றே - யகநாடிக்
காணுஞ் சிவனடியர் கண்டா யபிசமெனல்
பேணுமருள் பெற்றதனாற் பேசு (௮௮)

கோடியினுங் கோடியாக் கூறும் படியபிச
நாடியது ஞானபிட ஙங்கடவுள் - தேடியடைந்
திட்டான் பிறந்தானோ வேழையிரா மன்போல
முட்டாளே யோனிவழி முட்டு. (௮௯)

மிக்கவர்கண் மாண விளம்பினர்கா ணெஞ்சிவனைத்
தக்க படிப்பிறவாத் தன்மையனென் - றொக்கவரி
யோனிவாய்ப் பட்டானென் றோதியதுங் காண்டிமறை
தானிசைக்குந் தன்மை தழைந்து. (௯௰)

விசேடம்.

பிரமன் படைப்பெங்கே பேதாய்நின் மாலோன்
உரமுற்ற காப்பெங்கே யோதாய் - பிரமன்
றலையொன்றை யெங்கோன் றடிந்திட்ட வந்நா
ளலைவுற்று ரன்றே யவர் (௬௧)

பிரமன் றலையொன்றைப் பேதாய் தெறலா
லரனுருக் கத்தி யறைவாய் - பிரமன்
இறந்தானே வப்படியு மேற்குமோ வூழிக்
கிறைமாட்டென் டாறு வியம்பு. (௬௨)

ஊழிக் கிறைமாலா யோதுவாய் நீரினிடை
யாழு மவன்றனு மந்நீரோ - வூழிக்
கிறையா முருத்திரன்கண் ணெய்துமங்கி முன்னே
செறியுமோ தீரா துயிர். (௬௩)

செத்தகதை கோடிசேருமே சீரழிந்த
தெத்தனையோ கோடி யிசையுமே - யித்தரையில்
நின்மாலுக் கந்தோ நிஜங்காணு மின்னுமுறு
கண்மாலென் செய்வாய்நீ காண். (௬௪)

நித்த னறிஞ னிராலம்பன் பூரணனெம்
மத்தன் சிவனன்றி யாய்ந்திடினீக் - கொத்துரைசெய்
வாரோ வமல னவனையே தெய்வமெனப்
பாரோர் பணிவார் பரிந்து. (௬௫)

மங்களாசரணை.

நின்போதத் தாலழிய நீர்மைகெட வேயுண்மை
யென்போதத் தாலிங் கிசைத்தேனால் - மன்போதங்
கொண்டமறை நூல்கொண்டு கோதாட் டொழிகண்டாய்
பண்டைவினை போகும் பறந்து. (௬௬)

வீணே சிவநிந்தை மேல்விழுந்து செய்யற்க
வீணே வினையும் வினைப்போகம் - வீணேகாண்
அச்செய்கை யாதலினா லச்சுதனை மெச்சிநிதம்
பச்சிலையிட் டேத்தாய் பரிந்து. (௬௭)

அச்சுதனைப் பூசித்தே யன்புசெயி னுங்கவன்ற
னிச்சைவழி நீயு மிசைந்தின்றே - மிச்சையெனப்
போகமலம் விட்டுப் புராந்தகனுக் காளாவாய்
சோகமறுஞ் சொன்னேன் சுகம். (௯௮)

சுகந்தருவான் காழிச் சுடர்ஞான வள்ளல்
குகனு மவனருளைக் கொண்டே - செகமறியப்
பெற்றான் சிவனுருவம் பின்னைப் பிரானென்று
கற்றார் மகிழ்ந்துரைப்பர் காண். (௯௯)

அந்தோ நரகி லழியாமல் காழிவளர்
சிந்தா மணியருளைச் சேரவே - முந்தானை
போலிட் டழைத்தபொழு தற்றமணி வண்ணனையே
யோலிட் டழைப்பா யுவந்து. (௧00)

வாழ்வு வருங்கண்டாய் வண்பூதி கண்டியணிந்
தாழியா னெங்க ளரனடியார் - சூழிலின்மு
னேத்துமா போலென்று மேத்துவா யுள்ளமுவந்
தோத்துரைக்கு முண்மை யுணர்ந்து. (௧0௧)

வாழ்த்து.

மறையா கமம்வாழி மாலயனும் வாழி
பிறைசூடு மெங்கள்பெரு மானோ - டறம்வளர்த்தாள்
வாழி சிவசமயம் வாழிபர மாசிரியர்
வாழியுல கெல்லா மகிழ்ந்து.

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ பரசமய கோளரியார் திருவடிவாழ்க

சத்தியம். அம்முதற்காரணமாகிய மாயைக்கு ஜடத்வம் பிராப்தமா
கையால், அதனை ஸ்வதந்திரவஸ்துவாக வவரங்கீகரியார். அதனால்
அவர் பரமகாரண வஸ்துவாகக்கொண்டு வழிபடும் மெய்ப்பொருள்
அம்மாயை யாகாது. அவர் வழிபடும் பரம்பொருளாயுள்ளது சிவ
மொன்றேயாம். வழிபடுகின்ற அதிகாரியாகிய சேதனனுக்கே மாயை
குறைந்திடுமாயின், அந்தமாயை அவனுக்கு உபாஸ்யப்பொருளாயி
டுதல் யாங்ஙனம்? அங்ஙனமாகாமையால், அம்மாயோபாஸகனா
காத சைவசித்தாந்தி மாயாவாதியாக் மாட்டான்.

இதனை யோராது நமதன்பர் சைவசமயியே மாயாவாதியென்று
பேசியது அவரதறியாமையாகவே முடிந்தது. இனி நமதன்பரது ம
தமே மாயாவாத மாதலை இனிது வெளிப்படுத்துவாம். இவரது மத
த்தில் பிரமமே உலகத்துக்கு முதற்காரணமென்று கூறுவதாக விவர்
பிரஸ்தாபித்தாரன்றோ? அதனை யவ்வாறே கொள்வாம். அப்பிரம
ம் நிர்விகாரமாயுள்ளது. அது உலகமாக விகாரப்படுதல் யாங்ஙனம்?
அன்றியுமப்பிரமம் ஞானவடிவமாயுள்ளது. அது உலகமாகிய ஜடப்
பொருளாகக் காரியப்படுதல் யாங்ஙனம்? யாம் மாயையெனக்கொ
ண்ட பொருளையே யிவர் பிரமமெனக்கோடலால், இவர் மாயாவாதி
யாயின தன்மையறிக. எமது மாயையைத்தவிர விவருக்குப் பிரம
மென்பதொருபொருளில்லை யாகையால் இவரை மாயாவாதி யென
வும், போலிப்பிரமவாதி யெனவும் பெரியோர் கூறுவரென்க. அன்றி
யும், இவர் மதத்தில் எல்லாம் மித்தையென்று கூறும் வழக்குண்மை
யாலிவரை மித்தாவாதியென்று கூறுதலுமாம். மித்தையென்பது
பொய்யென்று பொருள்படும். இவர் மதத்தில் மாயையென்பதற்கு
ப்பொய்யென்றே பொருள் கூறுவதுண்மையாகையால், மித்தாவாதி
மாயாவாதி என்பன வொருபொருளிலேயே நிலைபெறலடையும். அந
னுமே இவர் மாயாவாதியாயிடுதல் தடைபடமாட்டாது. இன்னுமி
வர் மதத்தைப் பிரச்சந்நபௌத்தமென்று கூறுவதும் வழக்கமாம்.
அதனாலிவர் பிரச்சந்நபௌத்தருமாயிடுவர். இவ்வெல்லாப்பெயர்க
ளும் நாஸ்திகத்திலேயே பரிவஸாநமாமென்க. இதனையிவ்வளவினி
றுத்தி, யாம் விடுப்பதாக மேற்கூறியகடாக்களை யினி யேவுகின்றோம்.
சிவசம்பந்திகளிடத்து மாத்திரமே மறலியூர்தியாகிய கடாச்சென்
றடர்த்திடவஞ்சும். அசைவரிட மஞ்சாது குதித்தோடி விடர்ப்படு
த்துமென்க. இனி அக்கடாவருமாறு.

பிரமவித்தியா நாவலரைக் கடாவுதல்

1. சங்கராசாரியர் ஜகத்குருவாயின், அவருக்குமேலொரு குருவிருத்தல் கூடாதன்றோ? அவருக்குக் குருவாயிருந்தவர் கோவிந்தயோகியென்று நீவிர்கொண்டாடுமாறென்னை? அவர் சமுகத்தில் நமது சங்கராசாரியர் குருவையிடுதலொழிந்து சிஷ்யராவாரெனின், அப்போது அவருக்கு ஜகத்குரு பட்டம் நிலைப்பதெங்கே? முக்காலத்திலும் நிலைபெறாத ஜகத்குருபட்டம் சங்கராசாரியரிடத்து அவாந்தர கற்பிதமாகாமலினிவேறென்னாகும்?

2. சங்கராசாரியருக்கு ஆசாரியர் என்னும் பட்டமுண்டாகியவிதமெப்படி? இவ்வாசாரியர் பட்டம் வைஷ்ணவரும், மாத்துவரும், விசுவகுலத்தவரும் பெற்றிருப்பது உலகிற் பிரசித்தம். ஸ்மார்த்தர்களுக்கு எங்கும் ஆசாரியர்பட்டம் வழங்கக்காணேம். இங்ஙனமாக, ஸ்மார்த்த வேதியர்களுக்குக் குருவாகிய சங்கராசாரியர் ஆசாரியர் பட்டம் பெற்றதெங்ஙனம்?

3. சங்கராசாரியருக்கு அந்தப்பெயர் தந்தைதாயர்களாலிடப்பட்டதா? கோவிந்த யோகியாற் கொடுக்கப்பட்டதா? தம்மால் வைத்துக் கொள்ளப்பட்டதா? அல்லது வேறுவிதத்தால் விளம்பரப்பட்டதா? இதற்குப்பிரமாணமுளதேல், அந்த நூற்பெயர்யாது?

4. சங்கராசாரியருக்கு யாவராற் சந்யாஸம் கொடுக்கப்பட்டது? அது கர்ம சந்யாசமா? ஞான சந்யாசமா? கர்மசந்யாஸமெனின், அவர் ஜாதி விலக்கான பலகாரியங்கள் செய்தது யாங்ஙனம்? ஞான சந்யாஸமெனின், அது எங்கே கூறப்பட்டது? கர்மவர்ஜிதராகிய அவரைக் கர்மாநுஷ்டான பரராகிய ஸ்மார்த்தர்கள் குருவாகக் கொண்டதாம் யாங்ஙனம்? அன்றியும், "அஸ்வாலம்பம் கவாலம்பம் ஸந்யாஸம் பலபைத்ருகம்-தேவரேணஸுதோத்பத்தி: கலௌபஞ்சவிவர்ஜயேத்" என்னும் பிரமாணப்படி அசுவமேத முதலியவற்றோடு கலியிற் கொள்ளத்தகாததாக விலக்கிய சந்யாஸம் சங்கராசாரியருக்கு விகிதமாயினவாறென்னை?

இவற்றிற்கு நமதன்பர் தெளிவான சமாதானமெழுதி விடுத்துபகரிப்பாராக. இப்புதிய நாவலர் சைவர்களுக்குச் "சந்யாஸம்விதிக்கப்பட்டிருக்கின்றதா?" என்பது முதலிய கேள்விகள் விடுத்தமைக்கு பரம்பதில் கூறுவது ஆவசியகமன்றாயினும், மந்தர்களது பிரமை

நிவிர்த்தியார்த்தம் அவற்றிற்குஞ் சமாதானமெழுதி விரைவில் வெளி
ப்படுத்துவாமென்க. அன்றியுமிவர் இதற்கு முன்பு தாம் வேறுபெ
யர்களான் மறைந்து விவகரித்ததை விட்டு இப்போது பிரமவித்யா
பத்திராதிபர் என்று வெளிப்பட்டு அத்துவித விசாரத்திலிழிந்து
அட்டகாசஞ் செய்ய வாரம்பித்தனர். ஜகத்குருவிசாரத்தி லிவருக்
குண்டாகிய தோல்வி இவரது அத்துவிதவிசாரத்திலுந் தொடர்ந்து
நிலைபெறுமாகலின், அஃதங்ஙனமாகும்போது அதனை விடுத்து அ
ண்டவிசாரத்திலிறங்கி (வாரும் ஒரு கைபார்ப்போம்) என்று வாது
க்கழையாமற் போகார். இப்படியே யொன்றைவிட் டொன்றைப்பற்
றி முழுதுந் தோல்வியையே பூஷணமாகக்கொண்டு பின்னிடுவ திவா
தியற்கை யென்க.

வேதாந்த சித்தாந்த சமரசம்.

இவர் இவரது அத்துவித விசாரத்தைத் தொடங்குவதன் மு
ன்னர் "அறிவிப்பு" என வொன்று வெளிப்படுத்தியிருக்கின்றார். அ
தில், "வேதாந்தமும் சித்தாந்தமும் ஒருபொருள் கொண்டு முடியும்
ஒருமுதல்வனருளிய நன்னூலாவதுபோல், ஸ்ரீமத் ஹிரண்ய கர்ப்ப
யாஜி ரவிகுலராஜா முத்துவிஜயரகுநாத பாஸ்கர ஸேதுபதி மஹா
ராஜன் என்னும் ஓர் மன்னவனுதரனை பெற்று ஒருமுடிவுள்ளதாய்
எவ்விதத்தும் நமது நாட்டில் புறச்சமயங்கள் ஒழிந்து நற்சமயம்
நிலை பெறவேண்டியே வெளிவந்துலாவுவன இவ்விரண்டு பத்திரிகை
களும்" என்றெழுதித் தமது பிரமவித்தியாவுக்கும், ஞானபிர்த
பத்திரிகைக்குஞ் சம்பந்தங்காட்டினார்.

இனி வேதாந்தமும், சித்தாந்தமு மொற்றுமை யுடையன வெ
ன்பதெமக்கு மொப்பே. வேதாந்தம்=வேதத்தினந்தம், சித்தாந்தம்
=ஆகமத்தினந்தம். வேதம் ஒருநூலும், ஆகமம் ஒரு நூலுமாக வி
ரண்டு நூல்கள் பொதுச்சிறப்பாக முதல்வனு லருளிச்செய்யப்பட்
டமையால், அவ்விரண்டு நூல்களின் முடிவுகளொன்றிலொன்று வி
ரோதிக்க ஆவசியகமில்லை. ஆகையால், வேதாந்த சித்தாந்த சமரச
ஞான முடையார் மதம் சர்வஸம்பிரதிபந்நமாயிடுதல் மரபாமென்
க. வேதாந்தம் கனியும், சித்தாந்தம் அதன் சாரமுமாம். இதனை
"திரும்வேதாந்தமென்றுச்சியிற் பழுத்த-வாராவின்பவருங்கனி பிழிந்து-சார
ங்கொண்ட சைவசித்தாந்தத்-தேனமுதருந்தினர் சிலரே" என்றருளிய ஸ்ரீ
குமரகுருபரதேவர் திருவாசகத்தே யறிந்திடலாம். இதனொடு நம

து பிரமவித்யா பத்திராதிபரது வேதாந்த மிணங்காதென்க. இந்த
ப்பத்திராதிபர் ஆன்மாவே பரம் என்பது வேதாந்தமென்று வா
திப்பவர். ஸ்ரீகுமரகுருபரதேவர் ஆன்மா பசுவென்றும், பரமான்
மா பதியென்றுங் கொள்வது வேதாந்தமென்று வாதிப்பவர். இவ்
விரண்டு வேதாந்தங்களில் சீவனைப்பரமென்னும் வேதாந்தம் ஆச்
சீவனை நிஷேதித்துச் சிவனே பரம் என்று ஸ்தாபிக்கும் சித்தாந்
தத்தோடு சமரசம்பெறுதல் கூடாதாகையால், சீவன்பரமன்று சிவ
னேபரமென்று ஸ்தாபிக்கும் வேதாந்தமே அவ்வாறு ஸ்தாபிக்கு
ஞ் சித்தாந்தத்தோடு சமரசம்பெற் றொளிபெறுமென்க. இவ்வா
றுகொண்டு குணப்படமாட்டாதார் யாம் வேதாந்த சித்தாந்த வொ
ற்றுமை ஞானமுடையார் என்று வெளிவருவது கேவலம் அசங்கத்
மென்றறிக. வேதாகமங்களை யருளிச்செய்த சிவபெருமான் வேதத்
தில் சீவன் பிரஹ்மமென்றும், ஆகமத்தில் சிவன் பிரஹ்மமென்றுங்
கூறியதில்லையாதலின், அவ்விரு நூல்களினுஞ் சீவன் சேவகன், சி
வன் சேவ்யன் என்னுந் துணிபே யாவராலுந் துணியத்தக்கதாயுள்
ளதென்க. இதனால் சீவப் பிரஹ்மவாத போதிகமாகிய நமதன்பர
து வேதாந்தம் சித்தாந்தத்தோடு சமரசமானதில்லை யென்பது சித்
தமென்றுணர்க. இனிச்சீவனை வேதத்தின் றுணிபொருளெனக்கொ
ண்ட விவர்போன்று கருமத்தை வேதத்தின் றுணிபொருளென்று
ம், காலத்தை வேதத்தின் றுணிபொருளென்றுங் கொண்டு வாதிக்
கும் வாதிகளும் வேதாந்திக ளாகலாமாகையால், இவர்களும் வேதா
ந்த சித்தாந்த சமரசங் கூறி வெளிவரலாமென்க. பாசப்பொருள்க
ளையும், பசுக்களையும் பரம் என்று வேதமூலங்கொண்டு வாதிக்கும்
வாதம் போலிவேதாந்தங்களா யொழியு மாகையா லவற்றோடினப்ப
ட்டு, "நானேபரம்" என்று வேதாந்தவாதம் புரியத்தொடங்கிய நம
தன்பர் மதம் போலிவேதாந்த மாகாமல் வேறுயாதாகவோ சிறந்தி
டும்? இவ்வுண்மைபோதரவே யன்றோ "வேதாந்த சித்தாந்த சமரச நன்
னிலைபெற்ற வித்தகச் சித்தர்கணமே" என்று வேதாந்த சித்தாந்த சமர
சங் கூறிய ஸ்ரீதாயுமானசுவாமிகள் "யாங்களே கடவுளென்றிடும் பாதக
த்தவரும்" என்று நமதன்பரது வேதாந்தத்தை வெட்டிச்சாய்த்து
வோர்களைத்தெறிந்தனர்? இவற்றை யுய்த்துணர்வார் வேதசிவாகமங்
களோடு முரணாமல் வேதாந்த சித்தாந்தங்களை மேற்கொண்டொழு
ந்த ஞானமிர்தத்தோடு வேதத்துக்கு முரண்பொருள்கூறி, ஆகமத்
தை யவிரோதமாகக் கொண்டதாக நாடகம் புரியும் பிரமவித்தியா

வை... சமரசம் பெற்றது என்று நமதன்பர் பிரஸ்தாபித்ததும் நாடகமென்றே தெளிந்திடுவரென்க. இவரே சிவாகமத்தைச் சித்தாந்தமென்று ஒப்பினராகையால் இனி யிதனுண்மையை யீண்டுச் சிறிதெடுத்திசைப்பாம். வேதத்தில் பாசபசுமார்க்கங்கள் கொள்ளக்கிடக்கின்றன. அவை பூர்வபட்சம். அவ்வேதத்தின் முடிவாயுள்ளது பதிமார்க்க மாகிய சைவமொன்றேயாம். அஃதொன்றே சித்தாந்தமாம். அச்சித்தாந்தத்தினையே சிவாகமம் விளக்கவெழுந்தது. அதனால் சிவாகமமுழுதுஞ் சித்தாந்தப்பெயர் பெற்றதெனவறிக. இவ்வாறு தெளிந்தபேர்க்கே வேதாந்த சித்தாந்த சமரசவுண்மை வெளியாமென்க. இது நிற்க.

விஷயவிரோதம்.

நமதன்பர் வேதாந்த சித்தாந்தங்களுக்கு ஒருமுதல்வனைக் கருத்தா வாகக்காட்டி, அப்படியே பிரம்வித்தியா-ஞானாமிர்தங்களுக்கு ஒருபரிபாலன கர்த்தாவைச் சுட்டினரன்றோ? இப்பரிபாலன கர்த்தர் நமதன்பர் கருத்தோ டிணங்கினவரன்று. வேதாந்த சித்தாந்தங்களால் வழிபடத்தக்க பெரியோனாகிய சிவன் நமதன்பரது போலி வேதாந்தத்தைக் கண்டஞ்சி யொதுங்குமாபோலவே ஈண்டெடுத்துக்கொண்ட விருபத்திரிகைகளுக் குதவியதலைவரு மிவரது போலி வேதாந்தத்தைக் கண்டஞ்சி யொதுங்காமற் போனாரென்க. இவ்வரசவள்ளல் நமது பிரமவித்யா பத்திராதிபர், சங்கராசாரியரைச் சம்பந்தரோடு சமானமானவரென்று பிரசங்கித்ததை மறுத்து சங்கராசாரியர் வழிபட்ட தனிமுதலாயுள்ளவர் சம்பந்தரென்று பிரகாசப்படுத்திய அன்பாளரென்னும் அருமையை யாம் கேட்டுள்ளோமாகையால், யாம்கொண்ட கருத்து ஸாமஞ்சஸமாமதென்க. ஞானாமிர்தக்காரரிடம் நமக்குண்டாகிய வருமையால் அவரிடஞ் சண்டை பிடிக்கத் தொடங்கிய நமதன்பர் சைவநிந்தை, சைவாசாரிய நிந்தை, சிவாகம நிந்தை, சிவவேதியர் நிந்தை, தேவார திருவாசக நிந்தை முதலிய தூஷணங்களிலிறங்கி, அம்மட்டிலுமொழியாமல் மெய்கண்ட சிவாசாரியர் நிந்தையிலு நுழைந்து பூர்த்தி செய்துகொண்டது அவரது தவமே போலும். இது நிற்க.

புறச்சமயம்.

இவர் நமது நாட்டில் "புறச்சமயங்க ளொழிந்து நற்சமயங்கள் நிலைபெறவேண்டியே வெளிவந்துலாவுவன இவ்விருபத்திரிகை

களும்" என்றானன்றே? ஞானமிர்தக்காரர் மாயாவாத போதிமாகி
ய பிரமவித்தியாவைப் புறச்சமய பத்திரிகையென்றே கொண்டிருக்
கின்றார். அகச்சமயம் - அகப்புறச்சமயம்-புறச்சமயம்-புறப்புறச்ச
மயம் என்னுஞ் சமயங்களௌவ்வொன்றும் ஆறுகப்பிரிந்து விளங்
கும். அவற்றுள், புறச்சமயம் ஆறனுளொன்று மாயாவாதம். இங்ங
னமாக, நமதன்பர் புறச்சமயமென்றது எதனையோ வறியேம்.

சிவாத்துவிதக்குழப்பம்.

இனி யிவரது பாரம்பயமார்க்கத்தின் கௌரவத்தை யோசித்துப்பா
ராமல் சுத்தவைதிக சிவாத்துவித சித்தாந்தம் தமது மதமெனவொ
ன்று எழுதிக்கொண்டார். முன்னரிவர் வைதிகரென்று வெளிவந்த
னர். இப்போது சிவாத்துவிதச் சொற்றொடர் பூட்டிக்கொண்டு வெ
ளியாயினர். இவரது ஜகத்குருவாகிய சங்கரரை இவரே கேவலாத்
துவிதியென்று கிளத்தினர். தாம் சிவாத்துவிதியும், தமது குரு
கேவலாத்துவிதியு மாயிடுதல் தமது குருபதேசத்தாற் றமடைந்த
வுறுதியேபோலும். இவ்வதரமான சம்பந்த மொழிக்கிடின்னன்றோ வி
வர்க்குச் சிவாத்துவித மொருகால் நிலைக்கலாம்? இவரது சங்கரம
தத்தில் சிவ விஷ்ணுக்களுக்கு அபேதமாகையா லிவர்கேவலம் சிவா
த்துவிதப்பிரசங்கஞ் செய்தது அசங்கதமென்க. இவரது சங்கரா
சாரியர் நரசிங்கமூர்த்தியைப் பூசித்து உடல்வேறாது பிழைத்தவரெ
ன்று சங்கரவிஜயாதிகள் கூறுதலாலிவரது அத்துவிதம் சிவனையே
பற்றியதெனல் அழிந்து, காலபேதத்தால் விஷ்ணுவையும் பற்றிவர்
த்தித்தல் வெளிப்பாயதென்க. அதனால், இவர்தமது சமயம் சுத்த
வைதிக சிவாத்துவித சித்தாந்தம் என்று பிரஸ்தாபித்தது வெறுங்
கற்பனையாயதென்க. இவரது பிரசங்கத்தில் யாதின்னுமொரு விசே
டங்கண்டாம். என்னெனின், "ஆரணவாகமங்களு மொப்பியவழி
சுத்தவைதிக சிவாத்துவித சித்தாந்தத்துறையை விளக்குவாம்" எ
ன்றிவர் பிரசங்கித்ததேயாம். இவரது சுத்தவைதிக சிவாத்துவிதத்
தை யிவர் சாதித்தற்கு 'ஆரணத்தை' யிவர் பிரமாணமாகத் தேடுவது
ஆவசியகமே. ஆகமத்தா லிவருக்குண்டாகும் பயன்யாது? வைதி
கம் வேறு, சைவம்வேறு என்று பூசலிட்ட விப்புத ஜனசிரேஷ்டர்
இவரது வைதிக சிவாத்துவித ஸ்தாபனத்துக்கு ஆகமமாதரவாயிடு
மென்றது எங்ஙனே வைதிகமாகும்? இவரிப்போதுதான் மெல்லச்
சைவராக விழித்தெழுகின்றார். இவரது மாயாவாதத்திலவரை விட்டு முற்று

ந்தொலைந்த போதன்றோ விவர்பாற் சைவமணஞ் சிறிதேனும் வீச
தற்கிடமுண்டாகலாம்? அங்ஙனமின்றி யிவர் தொடுக்குஞ் சைவ
பத மிவருக்கு அசைவத்தையே பிராப்தப்படுத்து மென்க. இது
நிற்க.

முறை பிறழ்ச்சி

இவர் பரமாசாரியர்க ளிவரென்பது தோன்ற ஜகத்குரு ஸ்ரீ ச
ங்கராசாரியர்-ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியர்-ஸ்ரீமத் ஆளுடைய பிள்ளை
யார் முதலினோர் எனவொன்று கூறியிருக்கின்றார். இதுவும் பேரா
ச்சரியத்தையே விளைக்கின்றது, எங்ஙனமெனின், இவரிப்போது ச
ண்டைக்கு ஆரம்பித்தது சங்கராசாரியர் ஜகத்குருவென்று சாதிக்
கவேயன்றி வேறில்லை. அதற்கு மாறாக அச்சங்கராசாரியரோடு மா
றுபட்ட வேறிருவரைச் சமானமாகக்கொண்டு இம்மூவரும் பரமா
சாரியர்கள் என்றது என்னையோ? சங்கராசாரியர் பரமாசாரியரா
யிருத்தல்போல ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியரும் பரமாசாரிய மூர்த்திக
ளாவரெனின், சங்கராசாரியருக்கு அப்பரமாசாரிய பட்டம் வியபி
சாரதோஷத்தை யடையத்தடையென்னை? இத்தகைய சங்கராசா
ரியருக்கு ஜகத்குருபட்டம் நிலைக்கு மென்பதும் அதிசயமே யாமன்
றோ? இவ்வாறு முரணிப்பேசுங் கலைத்திறமுடைய விவரதுமரபு வி
ளங்கவேபோலும் முன்பு ஆளுடைய பிள்ளையாரைப் பரமாசாரியரா
காரென்று பிரசங்கித்து இடர்ப்பட்டு மெலிந்தார்? இவர்தேடிய ப
ரமாசாரியரை முன்னும், ஸ்ரீகண்டசிவாசாரியரை இடையும், ஸ்ரீஞ்
ஞானஸம்பந்தரைப் பின்னும் அமையச்செய்தது எந்தமுறைபற்றி
யோ அறியேம். இவரிப்போது புதிதாய்த்தேடிக்கொண்ட வைதிக
சிவாத்வைதத்துக்கு அம்மூவரையும் பரமாசாரியர்களாகக்கொண்
ட காலத்தும் முறையே ஞானசம்பந்தர்-நீலகண்ட சிவாசாரியர்-சங்
கராசாரியர் என்று காலக்கிரமத்தை நோக்கி அமைக்கவேண்டியதே
மரபாமென்க. இவரொருகால் பிள்ளையாரைத் தமிழ்ப்பிரபந்தம் பா
டினவராக மதித்துக் கீர்வாண பாஷ்யகாரர்களுக்குப் பின்னரமைப்
பது மரபெனயோசித்து அவ்வாறு செய்திருக்கலாம். அங்ஙனமா
யின், ஈமதுபுத்திராதிபருங் கீர்வாணபண்டித ராகையா லிவரும் அ
ப்பிள்ளையாருக்கு முந்திட வினியாசைப்படுவார்போலும். பிள்ளை
யாரை முன்னொரு காரக்குப் பிடையே பயனும் வருவது சித்தமாத
லி னினியேனுமிவர் தெளிந்து குணப்படுவாராக.

அத்துவிதம்

இதனை யிம்மட்டி னிறுத்தி யிவரது அத்துவித விளக்கத்தை யினி வெளிப்படுத்துவாம். இவர் அத்துவிதம் நால்வகைப்படுமென் றார். அத்துவித மென்னுஞ் சொல்லுக்கு ஏகம் என்று பொருள் கூறமுந்து மிவர் அத்துவிதத்தை நாலாகக்கண்டது அதிசயமே. அந்நால்வகை அத்துவிதங்களிவை யென்பது போதரக் கேவலாத்துவிதம், விசிட்டாத்துவிதம், பாவனாத்துவிதம், சுத்தாத்துவிதம் என்று பிரசங்கித்தார். இவரிவ்வாறு வகுத்துக் கூறியதற்குப் பிரமாணமொன்றுங் கூறுதொழிந்தார். இவைகளைப் பிரமாணவாயிலாக நிறுவி இவற்றுள், தலையாயதிது வென்றுசுட்டித் தமது மரபினைக் காத்துக் கோடலன்றோ விவருக்கு வெற்றியாவது? அவ்வாறு செய்ததொழிந்து அத்துவிதப் பலசரக்குக் கடையினுழைந்து சமானாதிகரண வியதிகரணாத்வைதங்களையும் வெளிக்குக்கொண்டுவந்து எல்லா அத்துவிதிகளும் அத்துவித சத்தத்திற் போந்த அகரத்தை இன்மைப்பொருளிற் கொண்டார்களெனவும், வியதிகரணாத்வைதியாகிய மெய்கண்ட சிவாசாரியர் மாத்திரம் அதனை அன்மைப்பொருளிற் கொண்டாரெனவும், அவற்றுள், வியதிகரணாத்வைதியினது மதம் பாதஞ்சலத்தோடு விரோதிக்கின்றதெனவும், ஏனைய அத்துவிதங்கள் ஒரு நிலைமையினவாய் அப்பாதஞ்சல சூத்திரத்தோடிணங்கி யிருக்கின்றன வெனவும் பிரசங்கித்துத் தமதிலக்கணப்புலமையைச் சிறிது வெளிப்படுத்திக் கொண்டார். இவரது வேதாந்தத்தை விடுத்து வியாகரணத்தில் வாய்வைத்து எடுத்த விஷயத்தை வழவழவென்று விடப்பார்ப்பது தானோ இவரது ஆண்மையின்றிறம்? இவருக்கு அன்மைப்பொருளிவரதிலக்கணத்துக்குக் கோணலாயிருந்தாலிருக்கட்டும். இன்மைப்பொருளிவரது சொந்தமென்று வாதிக்கு மிவர் மதத்தோடு அவ்வின்மைப் பொருளிலேயே நின்று வர்த்திக்கு மேனைய மதங்கள் விரோதித்து இவரது கேவலாத்துவிதங் காலைக்கிளப்பிக் கொள்ளுமாறு கீழே வீழ்த்தித் துவைக்குமாறென்னை? இவரோடிணங்கிய விலக்கணத்தவரா லிவருக்குப் பரிபவமேயன்றிப் பஹுமான மொன்றுங் கிடைக்காமையா லிவரோடிணங்காதவராக விவர் பிரஸ்தாபித்த வியதிகரணாத்வைதியினிடம் வியாகரண விசாரஞ் செய்து காலப்போக்குச் செய்வது கேவலம் அறியாமையேயாம். இது நிற்க.

அன்மைப்பொருளையே துவிதத்தை முன்னடுத்து வந்த அகர
ம் தராதொழியவும், அஃதோரத்துவித முளதாகக் கொண்டு வியதி
கரணாத்வைதமென வதற்குப் பேரிட்ட பண்டிதர்தாம் யாவரோ?
இதற்கிலக்காக விவர் தேடிய மெய்கண்ட சிவாசாரியர் தமது அத்
துவிதத்துக்கு வியதிகரணாத்வைதமெனப் பேரிட்டு, யாண்டாயினு
ம் விதந்திருக்கின்றனரா? இதனை நமதன்பர் யோசிப்பாராக. இனி
யிவர் அத்வைதம் ஐந்து என்று பிரசங்கித்த விஷயம் யாவருமறிவா
ர்கள். இவற்றுளொன்றுதான் சங்கராசாரியரது அத்துவித மென்
பதிவரது மதம். இங்ஙனமாக, சங்கர மதத்துக்கே அத்வைத மென
ப் பேரிட்டு, யாமே அத்வைதிகளென்று இவரும், இவரது ஸ்மார்த்
த நண்பர்களுங் கௌரவம் பாராட்டித் தருக்குற்றுரென்னையோ?
அத்வைதமென்னுஞ் சொல் "ஒன்றாகாம லிரண்டாகாம-லொன்று மி
ண்டுமின்றாகாமல்" சிவசிவர்கள் விளங்குந் தன்மையையே விளக்க
வெழுந்த தறிக.

இதற்கு வேறான அத்வைதங்கள் வெறும் போலிகளென யா
மோதுக்கினுமாகையால், அவற்றோடினப்பட்ட நமதன்பரது அத்து
விதமு மொதுங்கிய தெனவே யமைவுடைத்தாம். அத்துவிதச்சொல்
லில் அன்மைப்பொருள் கொள்ளவேண்டுமெனின், அப்பிராமணன்
என்பதற்குப் பொருளென்னை? பிராமணனுக்கு வேறானவன் எனக்
கொண்டு க்ஷத்திரியாதி ஜாதிகளிற் சேர்ந்தவனைகப் பொருள் கோடல
மையுமெனின், அதுகூடாது. அவன் க்ஷத்திரியனாயின் அவனை க்ஷத்
திரியனெனவும், வைசியனாயின் வைசியனெனவும், சூத்திரனாயின்
சூத்திரனெனவும் எளிதி னுரைத்திடலொழிந்து அப்பிராமணன் எ
ன்று மயக்கப் பொருளுண்டாமாறு கூறுதல் யாங்ஙனம்? பிராமண
னும், பிராமணனல்லாத மற்றவனு மோரிடத்தி லிருந்தழி, இவன்
பிராமணன், இவன் அப்பிராமணன் என்று கூறுத லமையுமெனின்,
அவ்வப்பிராமணன் க்ஷத்திரிய வைசிய சூத்திராதிகளி லின்னானெ
ன்று கோடற் கிடைபுண்டாகாமையி னவ்வாறு கூறுதல் மரபன்று
மென்றொழிக. இனி அப்பிராமணன் என்பது பிராமணனாயிருந்து
தன்னிலைமை குன்றிய வொருவனையே சுட்டுதற்கியைந்த சொல்லா
யினதறிக. அப்பிராமணச் சொல்லில் முன்னிருந்த பிராமணத் தன்
மையொழிந்தவாறு அத்துவிதச் சொல்லில் முன்னிருந்த துவிதத்த
ன்மை யொழிந்தவாறுணர்க. பிராமணத் தன்மை யொழிந்தபோது
வேறு ஒருக்த்த் சாதித் தன்மை யுண்டாகர்தவாறு துவிதத் தன்

அத்துவிதம்

இதனையிம்மட்டி னிறுத்தி யிவரது அத்துவித விளக்கத்தை யினி வெளிப்படுத்துவாம். இவர் அத்துவிதம் நால்வகைப்படுமென்றார். அத்துவித மென்னுஞ் சொல்லுக்கு ஏகம் என்று பொருள் கூறமுந்து மிவர் அத்துவிதத்தை நாலாகக்கண்டது அதிசயமே. அந்நால்வகை அத்துவிதங்களிவை யென்பது போதரக் கேவலாத்துவிதம், விசிட்டாத்துவிதம், பாவனாத்துவிதம், சுத்தாத்துவிதம் என்று பிரசங்கித்தார். இவரிவ்வாறு வகுத்துக் கூறியதற்குப் பிரமாணமொன்றுங் கூறாதொழிந்தார். இவைகளைப் பிரமாணவாயிலாக நிறுவி இவற்றுள், தலையாயதிது வென்றுசுட்டித் தமது மரபினைக் காத்துக் கோடலன்றோ விவருக்கு வெற்றியாவது? அவ்வாறு செய்தலொழிந்து அத்துவிதப் பலசரக்குக் கடையினுழைந்து சமானாதிகர்ண வியதிகரணாத்வைதங்களையும் வெளிக்குக்கொண்டுவந்து எல்லா அத்துவிதிகளும் அத்துவித சத்தத்திற் போந்த அகரத்தை இன்மைப்பொருளிற் கொண்டார்களெனவும், வியதிகரணாத்வைதியாகிய மெய்கண்ட சிவாசாரியர் மாத்திரம் அதனை அன்மைப்பொருளிற் கொண்டாரெனவும், அவற்றுள், வியதிகரணாத்வைதியினது மதம் பாதஞ்சலத்தோடு விரோதிக்கின்றதெனவும், ஏனைய அத்துவிதங்கள் ஒரு நிலைமையினவாய் அப்பாதஞ்சல சூத்திரத்தோடிணங்கி யிருக்கின்றன வெனவும் பிரசங்கித்துத் தமதிலக்கணப்புலமையைச் சிறிது வெளிப்படுத்திக் கொண்டார். இவரது வேதாந்தத்தை விடுத்து வியாகரணத்தில் வாய்வைத்து எடுத்த விஷயத்தை வழவழவென்று விடப்பார்ப்பது தானோ இவரது ஆண்மையின்றிறம்? இவருக்கு அன்மைப்பொருளிவரதிலக்கணத்துக்குக் கோணலாயிருந்தாலிருக்கட்டும். இன்மைப்பொருளிவரது சொந்தமென்று வாதிக்கு மிவர் மதத்தோடு அவ்வின்மைப் பொருளிலேயே நின்று வர்த்திக்கு மேனைய மதங்கள் விரோதித்து இவரது கேவலாத்துவிதங் காலைக்கிளப்பிக் கொள்ளுமாறு கீழே வீழ்த்தித் துவைக்குமாறென்னை? இவரோடிணங்கிய விலக்கணத்தவரா லிவருக்குப் பரிபவமேயன்றிப் பஹு-மான மொன்றுங் கிடைக்காமையா லிவரோடிணங்காதவராக விவர் பிரஸ்தாபித்த வியதிகரணாத்வைதியினிடம் வியாகரண விசாரஞ் செய்து காலப்போக்குச் செய்வது கேவலம் அறியாமையேயாம். இது நிற்க.

அன்மைப்பொருளேயே துவிதத்தை முன்னடுத்து வந்த அகர
ம் தரு தொழியவும், அஃதோரத்துவித முளதாகக் கொண்டு வியதி
கரணுத்வைதமென வதற்குப் பேரிட்ட பண்டிதர்தாம் யாவரோ?
இதற்கிலக்காக விவர் தேடிய மெய்கண்ட சிவாசாரியர் தமது அத்
துவிதத்துக்கு வியதிகரணுத்வைதமெனப் பேரிட்டு, யாண்டாயினு
ம் விதந்திருக்கின்றனரா? இதனை நமதன்பர் யோசிப்பாராக. இனி
யிவர் அத்வைதம் ஐந்து என்று பிரசங்கித்த விஷயம் யாவருமறிவா
ர்கள். இவற்றுளொன்றுதான் சங்கராசாரியரது அத்துவிதமென்
பதிவரது மதம். இங்ஙனமாக, சங்கர மதத்துக்கே அத்வைதமென
ப் பேரிட்டு, யாமே அத்வைதிகளென்று இவரும், இவரது ஸ்மார்த்
த நண்பர்களுங் கௌரவம் பாராட்டித் தருக்குற்றாரன்றேயோ?
அத்வைதமென்னுஞ் சொல் "ஒன்றாகாம லிரண்டாகாம-லொன்றுமி
ரண்டுமின்றாகாமல்" சிவசீவர்கள் விளங்குந் தன்மையையே விளக்க
வெழுந்த தறிக.

இதற்கு வேறான அத்வைதங்கள் வெறும் போலிகளென யா
ம தாக்கினமாகையால், அவற்றோடினப்பட்ட நமதன்பரது அத்து
விதமு மொதுங்கிய தெனலே யமைவுடைத்தாம். அத்துவிதச்சொல்
லில் அன்மைப்பொருள் கொள்ள வேண்டுமெனின், அப்பிராமணன்
என்பதற்குப் பொருளென்னே? பிராமணனுக்கு வேறானவன் எனக்
கொண்டு க்ஷத்திரியாதி ஜாதிகளிற் சேர்ந்தவனாகப் பொருள் கோடல
மையுமெனின், அது கூடாது. அவன் க்ஷத்திரியனாயின் அவனை க்ஷத்
திரியனெனவும், வைசியனாயின் வைசியனெனவும், சூத்திரனாயின்
சூத்திரனெனவும் எளிதி னுரைத்திடலொழிந்து அப்பிராமணன் எ
ன்று மயக்கப் பொருளுண்டாமாறு கூறுதல் யாங்ஙனம்? பிராமண
னும், பிராமணனல்லாத மற்றவனு மொரிடத்தி லிருந்துழி, இவன்
பிராமணன், இவன் அப்பிராமணன் என்று கூறுத லமையுமெனின்,
அவ்வப்பிராமணன் க்ஷத்திரிய வைசிய சூத்திராதிகளி லின்னனெ
ன்று கோடற் கிடையுண்டாகாமையி னவ்வாறு கூறுதல் மரபன்று
மென்றொழிக. இனி அப்பிராமணன் என்பது பிராமணனாயிருந்து
தன்னிலைமை குன்றிய வொருவனையே சுட்டுதற்கியைந்த சொல்லா
யினதறிக. அப்பிராமணச் சொல்லில் முன்னிருந்த பிராமணத் தன்
மையொழிந்தவாறு அத்துவிதச் சொல்லில் முன்னிருந்த துவிதத்த
ன்மை யொழிந்தவாறுணர்க. பிராமணத் தன்மை யொழிந்தபோது
வேறு ஒருசுத்த சாதித் தன்மை யுண்டாகாதவாறு துவிதத் தன்

மை கெட்டபோது வேறு ஒரு எண்ணின்றன்மை யுண்டாயதின்
றும். அப்பிராமணன் பிராமணனு மன்று சூத்திரனுமன்று. அத்
துவிதம் இரண்டுமன்று, ஒன்றுமன்று. அப்பிராமணனில் பிறப்
பொழுக்கங்களாலாய பிராமணத்வமும், அப்பிறப்பொழுக்கங் கு
ன்றியதனாலாய சண்டாளத்வமுங் கேட்கப்படுமாறுபோல அத்துவி
தத்தில் உச்சாரணையிலாய துவிதமும், அது தன்மை மாறியபோ
துண்டாய ஏகத்வமுங் கேட்கப் பட்டவாறு முணர்க. அப்பிராம
ணனிடத்தில் பிராமணத் தன்மையும் வேறு சாதித்தன்மையும் கா
ணுவிடினும் அவனிடத்தில் பிராமணத் தன்மையும், சண்டாளத் த
ன்மையு மில்லாமற் போகாவாறு அத்துவிதச் சொல்லில் இரண்டா
ந் தன்மையும் ஒன்றாந் தன்மையுங் காணுவிடினும் அதில் ஒன்று மி
ரண்டு மில்லாமற் போயின தில்லை யென்றறிக. இதனையே மேல்யாமு
தகரித்த "ஒன்றாகா மிரண்டாகாம லொன்று மிரண்டு மின்றாகாம
ல்" என்னு மற்புதத் திருமொழி புணர்த்திய தாய்த்துணர்வர் மே
லோரென்க. இவ்வாறு தெளிந் தின்புறுதலே நியாயவாதிகள் மத
மாம். இதனை யுணர்ந்தபே ரிவரது விபரீதத்தைக் கண்டுங் கேட்டு
ம் மயங்கா ரென்க. விரிக்கிற் பெருகும். இதை யிம்மட்டில் நிறுத்தி,
இனி நமதன்பரது ஸ்மார்த்தமதக் குழப்பத்தையும் எடுத்
துக்காட்டிக் கண்டித்தொழிப்பாம்.

பிரமவித்பா பத்திராதிபரது

ஸ்மார்த்தமதக்குழப்பம்.

ஸ்மார்த்தம் என்பது ஸ்மிருதி ஸம்பந்தமுடையது எனச்சிற
ந்திடும். இதனைக் கையாண்டு வருபவரே ஸ்மார்த்தர் என்று உலகில்
பிரசித்தி யடைந்திருக்கிறார்கள். இவர் கைக்கொண்ட ஸ்மிருதிகள்
வேதத்தை மூலமாகவுடையன வென்பது இவரது நிச்சயம். ஆயி
னும், சுருதிகளுக்கும் ஸ்மிருதிகளுக்கும் விரோதமுண்டாயின், ஸ்
மிருதியைத்தள்ளிச் சுருதியைக் கொள்ளவேண்டியது என்று மீமா
ம்ஸா சாஸ்திரம் கூறுகின்றது. இதனால், சுருதியை மூலமாகக் கொ
ள்ளாத ஸ்மிருதிகளு முளவென வேற்படுகின்றது. இதனை யுணர்ந்த
பேர் ஸ்மிருதிகளை முக்கியப்பிரமாணமாகத் தழுவாரென்க. இனி
ஸ்மிருதிகளில் அதிக பாகம் வேதாவிரோதமும், ஏகதேசபாகம்

வேதவிரோதமு ள்ளதலே நியதமென்று நமதன்பர் வாதிக்கலாம். அவிரோதபாகம் இது, விரோதபாகம் இது என்று வியவஸ்தை யேற்படாமையாலும், ஒருவனுக்கு அவிரோதமென்று தோன்றியது மற்றொருவனுக்கு விரோதமென்று தோன்றுகையாலும் அது பயன்படாது. ஸ்மிருதிகாரர்கள் ஒருவர் போனவழி யொருவர் போனதில்லை. இவர்கள் பாசத்தழும்பேறிய பசுக்கள். இவர்களது நூல்களில் முரணுண்டாவது ஸஹஜம். ஆகையால், யார்யாருடைய புத்தியில் எந்தெந்தப்பகுதிகள் ஸ்மிருதிகளில் வேதாவிரோத மெனப்படுகின்றனவோ, அவைகளை அவரவர்கள் கைக்கொண்டு அநுஷ்டிப்பதை ஆட்சேபிப்பாரில்லை. சைவவைஷ்ணவர்களும் ஸ்மிருதிகளைத் தத்தமக்கிசைந்த மட்டி லங்கீகரித்து அநுஷ்டிக்கின்றார்கள். அவ்வாறநுஷ்டிப்பினும் இவர்களுக்கு முறையே சைவாகமங்களும், வைஷ்ணவாகமங்களுமே முக்கியம். சைவாகமங்கள் சிவனார் சொல்லியருளியதும், வைஷ்ணவாகமங்கள் விஷ்ணு கூறியதுமாம். ஸாமாந்ய ரிஷிகள் கூறியதைநோக்க விஷ்ணு சொன்னது உசிதமாகத்தட்டில்லை. அவரினும், மற்றையாவரினுமேலாய சிவபெருமா னருளிச்செய்த சிவாகமங்களை யாமாதரிப்பதின் மிக்கபுகழ் எமக்கு வேறொன்று மில்லை.

இச்சிவாகமங்களுக்குக் கர்த்தா விசுவாதிகரும், மஹாரிஷியுமாகிய உருத்திரப்பிரானே யாயினமையால், அவர் காமிகாதி யூர்த்வஸ்ரோதஸ்ஸூக்களைக் கொள்ளவும்; ஏனைய அதஸ்ரோதஸ்ஸூக்களைத் தள்ளவும் அச்சிவாகமங்களிலேயே விதித்திருக்கின்றனர். இவ்வாறு ஸ்மிருதிகளுக்கு நியமன மில்லாமையாலும், அப்படி நியமனமுண்டாவதாயின், ஒரு ரிஷிசொன்னதை மற்றொரு ரிஷி மறுப்பதாக முடிந்து, எல்லாம் மறுக்கப்பட்டனவா யொழிந்து நிர்மூலமாய்ப் போமாகையாலும், சிவாகமங்களை நோக்க ஸ்மிருதிகள் கௌரவப்பிரமாண மாகாவென்பதே சத்தியமென்க. சிவாகமங்களிலெழுந்த விதிவிலக்குகளுக்குச் சிவபெருமானே கர்த்தாவாயினமையால், அதனை அவரினுங் கீழிட்ட தேவர்களாவது, ரிஷிகளாவது மறுக்கவதிகாரிகளாகார்கள். அதனால், அவர் கூறியயாவும் ஸர்வஸம்பிரதிபந்நமாயிடுதல்காண்க. இச்சிவாகமங்களை ஸ்மிருதிகாரர்கள் எடுத்து நிந்தித்ததில்லை. அதவா நிந்தித்திருப்பார்களாயின், அவ்வாறு நிந்தித்தவர் பக்கலேகுற்றம் வந்து சாரும். அவ்விருடியர்க்குக் குற்றமில்லாமையை நாட்டவேண்டுமாயின், சிவாகமங்கள் சிவபெருமான

ருளிச்செய்தலை யல்லவென்று கூறுதல்வேண்டும். அங்ஙனங் கூறுதற்கு வேதோபப்ரம்ஹணங்களாகிய புராணங்க ளிடங்கொடுக்கமாட்டா. அப்புராணங்கள் வேதத்தை யெடுத்துப் புகழ்ந்ததுபோல் சிவாகமங்களையு மெடுத்துப் புகழ்ந்திருக்கின்றன. அவற்றையுந்தள்ளி யெமக்குச் சிவாகமம் அங்கீகார மில்லையெனின், அவர்களைக் கிறிஸ்தவர்களோடு சேர்த்து அவர்களது முகாலோபனஞ் செய்யாதொதுக்குவதே எமக்குமரபாம். கேசித்துன்மார்க்கர்களே அவ்வாறு சொல்லத்துணிவார்கள். அவர்களையே யாம் கிறிஸ்தவர்களோடு சேர்த்தொதுக்கினோம். வித்யாரண்யப்பிரபுருதிகள் முதலாயினோர் சிவாகமங்களைச் சிவப்பிரணீதமென்றே கொண்டு பூஷித்தார்களாகையால், அவரோடினப்பட்ட ஸ்மார்த்த நண்பர்கள்யாம் புகழ்ந்து பாராட்டத் தக்கவர்களேயாவர். சிவபெருமான் சொல்லியருளிய சிவாகமங்களில் விரோதமும் ஸாமாந்ய ரிஷிகள் கூறிய ஸ்மிருதிகளில் விசுவாச புத்தியும் பூர்வபட்சிகளுக் குண்டாயிருப்பது புதுமையினும் புதுமையாகவே யிருக்கின்றது. இதற்குப்புண்ணியக் குறைவே காரணமன்றி வேறு காரணம் எமக்குப் புலப்படவில்லை. எதிரிகள் தாட்சணியமின்றிச் சிவாகமங்களை அகௌரவப்படுத்தும்போது ஸ்மார்த்தர்களை யொருபொருளாகச் சைவர்கள் மதிக்கவாவசியகமென்னோ? சிவாகமங்களோடு விரோதியாத பாகங்களே ஸ்மிருதிகளில் எமக்கு அங்கீகாரமாயினவென்க. இது நிற்க.

ஸ்மார்த்தர்களிற் சிலர் வைதிகர்-சிரௌதர் என்று வெளிப்பட்டிருக்கின்றார்கள். ஸ்மார்த்தர் ஸ்மிருதி ஸம்பந்தமுடையவரெனவும், வைதிகர் வேதஸம்பந்த முடையவரெனவும், சிரௌதர் சுருதி ஸம்பந்தமுடையவ ரெனவுஞ் சொல்லப்படுவர். இந்தப்பெயர்கள் அவர்களுக்கு நூல்களின் பெயரை யநுசரித்துண்டாயின. சைவர்கள் வைஷ்ணவர்கள் என்னும் பெயர்கள் சிவனை வழிபடுவோருக்கும், விஷ்ணுவை வழிபடுவோருக்கும் முறையே பெறப்பட்டவாறு பூர்வபட்சிகளுக் குண்டாகாதவாறென்னோ? அவர்களுக்குத் தெய்வமிருந்தால், ஏனோ அத்தெய்வத்தின் பேரால் அவர்கள் மதம் பிரசித்தியடைதல் கூடாது? அவர்கள் தெய்வவழிபா டொழிந்தவர்களாதல்கொண்டே நூல்களின் பேர்களைத்தாங்கி நொந்துழலாநின்றனர். வேதத்தில் பலதெய்வங்கள் கூறப்படுதலால் அத்தெய்வங்களின் பெயர்களையெல்லாந் தாங்குதலின்றி அவற்றைக்கூறும் வேதத்தின் பேரையே யாம் தாங்கினோமெனின், வேதம் பலதெய்வங்க

ளைக் கூறியது என்னும் வார்த்தையைக்கேட்டால் பரவியர்களுஞ் சிரிப்பார்கள். "ஏகமேவாத்விதீயம்" என்னும் வேத வசனமும் பொய்ப்படுமெப்போம். அதவா இவரது வார்த்தையை நம்பலாமெனின், இவரது சங்கராசாரியர் "நசைவம்நசாக்தம்" என்று கூறிச்சிவன் சக்தி-விஷ்ணு-கணேசன்-சூரியன்-கபாலி முதலிய வேதத்தாற் பெறப்பட்ட தெய்வங்களைப் பிரதிஷேதித்துத் தன்னையே தெய்வமென்று கூறிக்கொண்டிருக்கிறார். இத்தெய்வதூஷண நாஸ்திகமதத்துக்கு ஏகாத்மவாதமென்றும் பெரியோர்கள் பேரிட்டிருக்கின்றார்கள். இதுவுந் தெய்வத்தின் பெயராகா தொழிந்தது.

இவர்களையே மாயாவாதிகளென்று சைவ நூல்கள் கூறும். இவர்கள் எப்படி மாயாவாதிகளாயின ரென்று முன்னமையாம் "பிரமவித்யா நாவலர் ஜகத்குருவாத பிரகரண" த்தில் இனிது பரிஷ்கரித்தோம். அதனை விவேகிகள் யூகித்தறிவார்கள். அதனுண்மையைத் தெளிந்து குணப்படாமல், நமதன்பர் சைவர்களை மாயாவாதிகளென்று மனப்பால் குடித்து மாழ்கினார். இப்படியுங் கெடுவாருண்டா? ஒருவன் றலையின்மேற் காகமெச்சமிட்டிருக்கக் கண்ட மற்றொருவன் அவனைப் பார்த்து அப்பா! உன்றலைமேற் காக்கை மலமிருக்கின்றது. அதனை யெடுத்துவிடு என்று கூறினான். அதற்கு அவன் அம்மலத்தைக் களைந்து பரிசுத்தப் படுவதொழிந்து சொன்னவனையே திருப்பிக் கொண்டு என்றலைமேற் காக்கை மலமில்லை, உன்றலைமேற்றான் காக்கை மலமிருக்கின்றது என்றான். இவ்வழக்கினையே மாயாவாதியாகிய நமதன்பரிடம் ஸமர்த்திக்கத் தக்கது. ஏகாத்ம வாதிகளை மாயாவாதிகளென்று யாமின்று கூறவந்ததில்லை. எம்மபெரியோர் அநாதியே கூறினார்கள். அவர்களை யெந்த மாயாவாதியுந் திருப்பி, யாம் மாயாவாதிகளல்ல, நீங்களே மாயாவாதிகளென்று கூறினதில்லை. எந்த மாயாவாத நூலில் சைவர்களை மாயாவாதிகளென்று சொல்லியிருக்கின்றது. சைவநூல்கடோறும் அகம்பிரமவாதிகளை மாயாவாதிகளென்று கூறியிருப்பது பிரத்தியட்சம். இம்மாயாவாதிகள் தம்மைப் பிரமவாதிகள் என்று இப்போது பேசத்தொடங்கினார்கள். இது ஒரு ஜாலவித்தையாம். இவர்கள் பிரமத்தை யுபாஸ்யப் பொருளாகக் கொண்டால் இவர்களைப் பிரமவாதிகளென்னலாம். பிரமம் உபாஸ்யப் பொருளானால், உபாஸகப் பொருள் வேறொன்று வேண்டும். அஃதியாது? தானே பிரமமென்று கூறுமிவரது மதத்தில் உபாஸ்யப் பொருளாகிய பிரமத்தைத் தவிர

வேறொரு உபாஸகப்பொருளுண்டாகாமையால், இவரது நிலைமை கேவலம் அஸப்யமாயிடுதல் காண்க. சவாரி செய்கிற புருஷனும் அவன் ஏறி நடத்துகிற குதிரையு மொன்றேயென்று வாதிக்கும் படிற்றுரைக்கு யாமென்ன விடைபகரலாம்? இவரோடினம்பட்ட நமதன்பர் பிரஹ்மவாதியாகார். இவர் அஹம்பிரஹ்மவாதி யாயினதுணர்க. அஹம்பிரஹ்ம வாதிகள் என்பதற்குச் சிவப்பிரஹ்மவாதிகளென்று பொருளாம். சிவனைப் பிரஹ்மமென்று வாதிக்கு மிவர்கள் சிவப்பிரஹ்மவாதிக ளாயினவாறு காலத்தைப் பிரஹ்ம மென்று வாதிப்பவர்கள் காலப்பிரஹ்ம வாதிகளும், கர்மத்தைப்பிரஹ்மமென்று வாதிப்பவர்கள் கர்மப்பிரஹ்ம வாதிகளுமாயிடுவர். அவர்களெல்லாந் தங்களைப் பிரஹ்மவாதிகளென்று சொல்லிக்கொண்டு வெளிவந்ததில்லை.

இங்ஙனமாக, ஏனோ இவர் மாத்திரம் பிரமவாதியாயிடத் தலைப்பட்டார்? பிரஹ்ம வாதிகளென்ற மாத்திரத்தானே சிவபரபேதார்த்தம் வெளிப்படுகிற தன்றிச் சிவனும் பரனுமொன்றென்னும் அபேதார்த்தம் பெறப்படுவதில்லை. இனிப் பிரமக்கிழத்தியென்று பெரியர் கொண்டாடுஞ் சிவையை மணந்த பெரியோனே வேதங்களில் "துர்யம் ப்ரஹ்மஸம்ஞ்ஞிதம்" என்று கொண்டாடப் பெற்று விளங்கலால், அந்தபிரஹ்மத்தை வழிபடுஞ் சைவர்களே பிரஹ்மவாதிகளாயிடுதல் துணிந்திடுக. பிரஹ்மவாதிக ளென்றதும், சைவர்களென்றது மொன்றேயாம். வேதங்களில் துரீயத்வம் ஸ்தாபிக்கப்படுகிறபோது பிரஹ்மம்-அல்லது சிவம் என்னுஞ் சொற்களே ஆளப்படுகின்றமையாலும், "சிவமத்வைதம் சாந்தம் சதுர்த்தம் மந்யந்தே" என்பது போன்ற பலசுருதிகள் அதனை நிறுத்துகையாலும் சைவவாதிகளாகிய யாமே பிரஹ்மவாதிகளாயின துணர்க. பிரஹ்மபரியாய ஸ்தானத்தினின்ற சிவவாசகத்தை யிவராதரிப்ப துண்மையாயின், யாம் பிரஹ்மவாதியென்று வெளிவந்ததுபோல் யாம் சைவவாதி; அல்லது சைவர் என்று இவர் வெளிவராத தென்னோ? இவர் "யாம்வைதிகர், சைவரன்று" எனவாதித்த அசைவ சிரோமணியாயினது பிரஸித்தியாகையால், இவர் பிரஹ்மவாதி யென்று சுமக்க முடியாத தலைப்பாரங் கொண்டது சர்வாஸங்கதமென்க. இதுகாறும் யாமெடுத்துக் கூறிய நியாயங்களால் நமதன்பரது மதத்துக்கு ஸ்மார்த்தம்-வைதிகம்-ச்ரௌதம்-ஏகாத்மவாதம்-அகம்பிரமவாதம்-மாயாவாதம் என்பனவாதி தெய்வஸம்பந் தொழிந்த நாமங்களே ஸ்திரமாயினமையால், பரம நாஸ்திகப் பாஷண்டத்வமே அவர் பாலெய்தியதனை

ர்க. இவ்வுண்மை தெளிந்த சைவஸேறுக்கள் "ஆதிமறையோதியதன்பயனென்றம்மறியா-வேதியர்சொன்மெய்யென்றுமேவாதே" எனவும், "தாம்பிரமங்கண்டோர்போற் றம்மைக்கண்டீரங்கதுவே நாம் பிரமமென்பவர்பாணண்ணாதே" எனவும், "அகம்பிரமக்காரர் வெளியா மிருளில்விடாதே" எனவுஞ் சைவாசாரியர்கள் போதித்த வாய்மைநெறியிற் கட்டுண்டு "பசுநூல் கற்கும்-பிச்சரைக்காணாகண்வாய்பேசாதப்பேய்களோடே" என்பதுணர்ந்து நன்மை கடைப்பிடித் தொழுகுவதே நலமென்க. விரிக்கிற் பெருகும்.

இனி, ஸ்மிருதிகள் ஆசாரகாண்டம்-பிராயச்சித்தகாண்டம்-விவகார காண்டம் என்னும் பாகுபாடுகள் பெற்று விளங்கும். இவை வேதத்தின் கர்மகாண்டங்களைப் பற்றி யெழுந்தனவாம். அதனால், ஸ்மிருதிகளில் ஞானம் பூஜ்யமென்று ஏற்படுகின்றது. ஸ்மார்த்தர்கள் என்று தம்மைச் சொல்லிக் கொள்ளுபவர்களுந் தங்களைக் கர்மடாள் என்னுங் கருத்துக் கொண்டவர்களே யன்றி வேறில்லை. யாம் வைதிகர்-யாம் சுரௌதர் என்பவர்களும் கர்மத்தைப் பிரதானமாகக்கொண்டே வெளிப்படுவதன்றி வேறில்லை. யாம் சுரௌதிகள்-யாம் வைதிகர் என்று வெளிப்பட்டிருக்கும் ஸ்மார்த்தர்களுக்குக் கல்வி-ஞானம் ஆவசியகமில்லை. அன்னோர் யாகாதிகளைச் செய்துழன்று தக்ஷப்பிரஜாபதிக்குத் தம்பிகளாய்த் திரிந்து சிவபக்தி சூன்யர்களாய், (நாம் பிராஹ்மணர்-நமக்கு வேதம்வரும்-நாம் யாகாதிகள் செய்கின்றோம் என்று கனவுகண்டுகொண்டு) மமதையையே தாம் பெற்ற பேறாகத்துணிந்து இன்புற்றுவாழு நீரரே யாவர். இவர்களுக்குத் தெய்வஸம்பந்தமே கிடையாது. இவர்கள் "வதுவைச்சடங்கதலை மைதுனமாக் கொள்வோரே" யாவர். ஒருமணவறையில், மணமகனை யொழித்துக் கன்னிகை யொருத்திக்குக் கலியாணஞ் செய்யுமநுபவமே நமது சுரௌதிகளுக்கு யாம் தேடிய வுபமான நிதரிசனமாம். இவர்களுக்குப் பதிநிச்சயஞான முண்டாகாமையால், சிவா என்றொருகால் வாயாலுச்சரிக்க நேரினும், அதனை யப்படியே யநுஸந்தானஞ் செய்யாமல் இராமகிருஷ்ணகோவிந்த வாசுதேவ நாமங்களையுங் கூடவே சொல்லித்தொலைப்பர். நாராயணனிடத்தில் பரத்வ புத்தியிருந்தாலும் பரவாயில்லை, அதுவுமில்லை. இவர்களுடைய நிலைமை "அந்தச்சாக்தஃ-பஹிச்சைவஃ-லோகேவைஷ்ணவஃ-அயமேவ ஆசாரஃ" என்று விளங்குவதொன்று. ஸ்வேச்சாசார பிரவர்த்தகர்களாய் மதுமாம்ஸங்களைச் சேவித்தன் முதலிய ஹேயங்களை மேற்கொண்டு வாமசாக்தர்களாய்ப் பிரவர்த்திக்கும் ஸ்மார்த்தர் கடமை

யைக் காஞ்சி முதலிய ஸ்தலங்களிற் சென்று கண்டிடுக. சக்தியே தெய்வம் என்று வாமசாத்தத்திற்கட்டுண்டு அநாவலம்ப மேற்கொடு வாழ்பவர்கள் ஸ்மார்த்தர்களே யன்றி யேனைய ஜாதியினரன்று. இவ்வாறு பலதெய்வத் தொழும்புகொண்டு வாழ்பவர்கள் அப்படியே நில்லாமல் அவைகளைப் பொய்யென்றும் நிஷேதித்தலால் நாஸ்திகமணிகளாகிய அவரது கூட்டுறவு நஞ்சினுங் கொடியதேயாமெனக. இனி யிவர்களை நாஸ்திகஸ்மார்த்தர்-நாஸ்திகவைதிகர்-நாஸ்திகசமௌதர் என்று யாம் பேரிட்டழைப்பதே நலமாமெனக.

இவர்கள் ஸ்மிருதிகளையும், வேதங்களையும் மதித்து மகிழ்வது போலத் தெய்வத்தினிடத்திலே மதிப்பும், மகிழ்ச்சியுங்கொண்டு வாழார்கள். இவர்களுக்குச் சிவநிந்தையி லுள்ளங்கூசமாட்டாது. வேதநிந்தையில் மனஸ்தாப மதிகமுண்டாகும். இப்படியே ஸ்மிருதிகளிலும் நிந்தை சகிக்கமாட்டார்கள். புராணாதி நிந்தைகளிலே வழவழ வென்று விட்டு விடுவார்கள். இப்படி அவர் செய்வதெல்லாம் சுருதி ஸ்மிருதிகளுக்குத் தாங்களே அதிகாரிகளென்று மனத்திற் கொண்டிருக்கும் அழுத்தத்தினாலேயே யன்றி வேறில்லை. இதனைக் கூர்ந்து யோசிக்கிறபோது அவர்கள் சித்தாந்த மீதென்று எவருமெளிதி னுணர்ந்திடத் தடையில்லை. வேதம் எதனைஅபர்ந்தது? அதிற் போந்த பிரமேயத்தி னருமை நோக்கியேயாம். பிரமேயம் சிவம். அதனை விளக்கவந்த பிரமாணம் வேதம். பிரமாணம் பிரமேயம்வேண்டாதபோது அநாவசியகம. இதனையாவரு மொப்புவார்கள். இதற்கு விரோதமாக வேதம் பெரிதெனக்கொண்டு, சிவாபிமானமொழிந்து, யாம் சைவரென்று வெளிவரவுங்கூசி, யாம்வைதிகர் என்றுவாயால் வடித்துவாழும் வாழ்க்கையினரது வாழ்வு மொருவாழ்வா? வேதம் உடம்பும், சிவம் உயிருமாம். உயிரோடு கூடியிராத வுடம்பு பிணமென்னும் பெயர்பெறுதலால், நமதன்ப ருயிரை யொழித்து உடம்பையோம்பல் பிணத்தை யோம்புதலுக்கே யொப்பாயினதறிக. பிணத்தை அமங்கலமெனச் சிஷ்டர்களொதுக்குவது மரபாயினமையால், சிவமொழிந்தவேதம் அமங்கலத்வமெய்தி யொதுக்கப்படு மியல்பினதேயா யழியுமெனக. வேதத்தில் தெய்வம் அல்லது சிவம் பிரதானமாகாதபோது அவ்வேதம் பைபில் குரான் முதலிய நூல்களின் முன்னுமொரு நூலாகநின்று கௌரவம் பெறுதெனக. நூல்களுக்கு உலகில் பெரியோர்கள் பாராட்டிவருங் கௌரவம் அந்நூல்களிற் பிரதிபாதிக்கப்படும் விஷயவருமையை நோக்கியும், அந்

வி ள ம்

1. சித்தாந்தரத்நாகரம் என்னு
னுக்கு முன்னர் வைதிக சைவ சித்த
சோமசுந்தர நாயகரவர்களால், அநேக
னை . . . . பொதிந்து வெளியாகிவந்த
யும் சுத்தாத்துவித சைவசித்தாந்த ஸ்வ
னைமுப்பத் . . அரிய சிவ்பாரம்பரிய வி
துள்ளன . . . . யாவருமறிவார்கள்

2. இந்நூல்களைப் பார்ப்பவர்கள் பு
டாது சகலசந்தேகங்களும் நீங்கி இன்புறு
ல. அநேக பிரபல உபநிஷத் பிரமாணங்களை
வைதற்காலம் கிடைப்பதருமையாக, சென்னை
சித்தாந்த சபையார் கல்விருப்பின்படியும்,
கள் மைத்துனர். ம-ா-ா-ஸ்ரீ-சி. நாராயணச
ருகர்-ம-ா-ா-ஸ்ரீ - த. கிருஷ்ணசாமிநாயகர்
வேண்டுகோளின் படியும் ஷை ஸ்ரீநாயகரவர்
ல்லா நூல்களையும் பரிசோதித்து 6-பாரங்கொ
கையாக வெளியிட்டு வருகின்றோம்.

3. கையொப்பக்காரர்களாகிய வெளியூரார்
தொகையை முன்பணமாக மணியார்டர் செய்ய

4. இவ்வரிய சித்தாந்தரத்நாகரம் என்னும் நூ
மாகப் பொருளுபகரிக்கும் சைவாபிமானச் சீமான்களுடை
ர்கள் நன்றியறிதலுடன் இந்நூற்சஞ்சிகை . . . கவரவாபி
ளென்னுந் தலைப்பின்கீழ் பதிவுசெய்து வெளியிடப்படும்.

5. இந்நூற் சஞ்சிகை உள்ளூர் வெளியூர்களிற் பரவும்பொ
டு முயற்சிசெய்வாரது முயற்சி . . . . . தக்கவாறு திரவியச
ஞ் செய்யவும் சித்தமாயிருக்கின்றோம்.

6. பத்துப் பிரதிவாங்குவோர்க்கு ஒன்று அதிகமாகக் கொடு
கப்படும். ஒரு சஞ்சிகையின் விலை அணா 4 ஆகவும், முன்தொகை
செலுத்துவோர்க்கு (6) மாதத்திற்கு ரூ 1-6-0 ஆகவும், வருஷத்தி
ற்கு ரூ 2-8-0 ஆகவுஞ் சந்தா ஏற்படுத்தப் பட்டுள்ளது. வெளியூரா
ர் தபாற் செலவு ஒருவருடத்திற்கு அணா 6. சந்தாத்தொகையுடன்
சேர்த்தனுப்பவேண்டும். கையொப்பக்காரர்கள் ஒவ்வொருவரும் த
ங்கள் விலாசத்தை அடியிற்குறித்த . . . . ற்குத் தெளிவா
யெழுதவேண்டும்.

7. ஸ்ரீஜ்ஞானசம்பந்தக் கடவுள் கருணைபுரிவாராக.

இங்ஙனம்:

சென்னை
30—4—06.

பல்லவபுரம் - அப்பாவுசெட்டி.

நெ. 30, கோவிந்தப்ப நாயக்கன் வீதி, சென்னை

9.9093

கண்ணிய சிலர்கள்.

மூர்த்தி ஸ்வாமிகள்

ஸ்ரீ-மதுரை சந்நிதானம், மதுரை.

துரைத்தேவர் அவர்கள்

Zemindar

ரைத்தமிழ்ச்சங்க அக்கிராசனாதிபதி

Madura.

முதலியார் அவர்கள்

Zemindar, Marakanam

சுப்பராய முதலியார் அவர்கள்

Zemindar

காம்பரநாதஸ்வாமிதேவஸ்தான தருமகர்த்தர்

Conjeevaram.

ஊதார். மெய்கண்டதேவ முதலியார் அவர்கள்

Mysore Hall Contonment, Bangalore.

" J. M. நல்லசாமிப்பிள்ளை அவர்கள், B. A. B. L.

District Munsiff, Salem.

" பு-சீ. தெய்வசிகாமணி செட்டியார் அவர்கள்.

Merchant,

Devi Villa, Tondiarpett, Madras.

" C. R. முருகேச முதலியார் அவர்கள்.

Dubash

Gordon Woodroffe & Co, Madras.

" கா: கங்காதர முதலியார் அவர்கள்

Late chief clerk, Traffic managers Office

S. I. R, Trichinopoly.

சென்னை,

வேதாகமோக்த சைவ சித்தாந்த சபையார்.